# 3554 கம்யூனிஸ்டுகள் தமிழ்நாட்டில் கைது


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 180
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 25 ஜமா. ஆகிர் 7 திங்கட்கிழமை [10-8-70]






பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

B.R.C. பெப்ரிக்
நிர். 6, 7, 8, 9
10 — 12
கிடைக்குமிடம்:
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130


## நிலப்பறி இயக்க எதிரொலி

சென்னை, ஆக 9

தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்தவிருக்கும் நிலப்பறி இயக்கத்தையொட்டி இதுவரை 3554 பேர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் பலஊர்களில் 144 தடை உத்தரவும்பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலப்பறி இயக்கத்தை முறியடிக்க தமிழ்நாடு அரசு முன் எச்சரிக்கையாக இந்த நடவடிக்கையை எடுத்திருந்தபோதிலும் திட்டமிட்டபடி நிலப்பறி இயக்கம் நடக்கவேசெய்யும் என்று கம்யூனிஸ்ட் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியினர் நடாத்தவிருக்கும் 'நிலப்பறி' நடவடிக்கை காரணமாக கைது செய்யப்பட்டவர்களில் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களான திரு. எம். கல்யாணசுந்தரம், தங்கமணிபோன்றோரும் உள்ளனர்.

நிலப்பறி இயக்கத்தை கைவிடும்படியும், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட உதவும்படியும் தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி அண்மையில் கம்யூனிஸ்ட கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்து ''அப்படி நிலப்பறி'' நடவடிக்கையை கைவிடாமல் நடாத்தியே தீருவோமென நின்றால் அரசாங்கம் கைகட்டிவேடிக்கையை பார்த்துக் கொண்டிருக்காது. சட்டம் இருக்கிறது. அது தன்வேலையைச் சரிவரச் செய்தே தீரும்'' என்றும் எச்சரிக்கை செய்திருந்தார்.

''தலைவர்களையும், எமது கட்சித் தோழர்களையும் ஆயிரக்கணக்கில் ஆட்சியாளர் கைதுசெய்து காவலில் வைத்தாலும் நாம் திட்டமிட்டபடி நிலப்பறி நடவடிக்கையை நடாத்தியே தீருவோம்'' என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

### இன்று

அல்லைப்பிட்டி, திங்.

வேலணைகிழக்கு நால்வர் மடத்தில்இன்று மாலை6மணியளவில் திருவிளையாடல் புராணச் சொற்பொழிவுத் தொடரில் 'நான்மாடக்கூடலான படலமும், நாகமெய்த படலமும்' என்னும் பொருள் பற்றி சைவப்புலவர் திரு. த. குமாரசாமிப் பிள்ளையும் 'மாயப்பசுவை வதைத்தபடலமும், உலவாக்கோட்டையருளிய படலமும்' என்னும் பொருள்பற்றி திருப்பூங்குடி வீ.கே. ஆறுமுகம் ஆசிரியரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

# வடக்கில் கைலஞ்சம் வாங்கும் அரச ஊழியர்களுக்கு ஆபத்து

## கையும் மெய்யுமாக சிக்கிக்கொள்ளலாம்!!

— நமது சிறப்பு நிருபர் —

வட பகுதியில் கைலஞ்சம் வாங்கும் அரசாங்க ஊழியர்களை ஆபத்து எதிர்நோக்குகிறது

கைலஞ்சம் கொடுத்து காரியத்தைச் சாதிக்கும் சம்பவங்கள் குறித்துப் பலவிதமான புகார்கள் கிடைத்ததைத் தொடர்ந்து வடபகுதிப் பொலிஸ் அதிபர் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பொதுமக்களுடன் தொடர்புள்ள அரசாங்க இலாகாக்களிலுள்ள அதிகாரிகள் கைலஞ்சம் வாங்குவதாகப் புகார்கள் பல தெரிவிக்கப்... களைக் கையும் மெய்யுமாகச் சிக்கவைக்க வடபகுதிப் பொலிஸ் அதிபர் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளார்.

மோசடி, கைலஞ்சம் போன்ற குற்றங்களுக்கு கொழும்பில் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன் திரு. லியனகேயை இங்கு திடீர் 'கைலஞ்ச' சோதனை நடாத்தும்படி வட பகுதி பொலிஸ் அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

கூடிவருவதாகக் கருதப்படும் இக் கைலஞ்ச கைங்கரியத்துக்கு உடந்தையாக இருக்கும் பொதுமக்களும் இந்த விஷயத்தில் எச்சரிக்...

கைலஞ்சம்வாங்குவது எப்படிப் பெரிய குற்றமோ அதே போன்றே கைலஞ்சம் கொடுப்பதும்பெரிய குற்றமாகுமெனறு அந்த அதிகாரி கூறினர்.

அரசாங்க இலாகாக்களில் மட்டுமல்லாது பொலிஸ் இலாகாக்களிலும் கைலஞ்சம் வாங்கும் உத்தியோகத்தர்களும் மாட்டிக்கொள்ள நேரிடலாமென்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

## பொலிஸ் சார்ஜன்ட் மாட்டிக்கொண்டாராம்!

யாழ்ப்பாணம், திங்.

கைலஞ்சம் வாங்கிக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கையும் மெய்யுமாக அகப்பட்டாராம்.

மன்னார் விசேஷ பொலிஸ் பிரிவைச்சேர்ந்த சார்ஜன்ட் வீரசேகராஎன்பவர் கைலஞ்சம் வாங்கிக்கொண்டிருந்தாராம்

முருங்கனில் இச்சம்பவம் நடந்துகொண்டிருந்த போது சார்ஜன்ட் மாட்டிக்கொண்டாராம். மோசடி. லஞ்சம்போன்றகுற்றப்பிரிவுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு லியனகே. கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து 750 ரூபாவைக் கைலஞ்சமாக குறிப்பிட்ட சார்ஜன்ட் வாங்கிக்கொண்டிருந்த போது. திரு. லியனகேயிடம் வகையாக மாட்டிக்கொண்டாராம்.

இதனைத் தொடர்ந்து, வட பகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம். சார்ஜன்டை தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளார்.

## சேகுவேரா வாலிபர்கள் சுவரில் பிரசுரம் ஒட்டுகையில் கைது

கொழும்பு, ஞாயிறு

உண்மையானமார்க்ஸீய லெனினிஸ புரட்சி அரசாங்கம் அமைக்கவேண்டும் என்று கூறும் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த நான்கு நபர்களை திருக்கோணமலையில் பொலிசார் கைது செய்தார்கள்.

சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் இவர்கள் கடற்படைத் தளத்திலுள்ள சுவர்களில் இந்தப் பிரசுரங்களை ஒட்டிக்கொண்டிருந்தார்களாம்.

குருசிங்க என்ற 24-வயது ஆசிரியர் பி. ஞானரத்ன என்ற 22 வயது ரயில்வே குமாஸ்தா, ரத்துபெண்டிகே என்ற 18 வயது மெக்கானிக் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டவர்களாவர். சேகுவேரா இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டுபிடிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேஷப் பொலிஸ் பிரிவினர் இந்த நபர்களைக் கைது செய்தனர்.

(சி. பி. ஏ.)

## சென்ட்சபை அதிகாரம் கட்டுப்படுத்தப்படும்?

கொழும்பு, திங்கள் ஊராட்சி மந்திரி திரு. பீலி...

## 'தோல்விகளை வெற்றியின் முதற்படியெனநிரூபித்தவர்'

தாவடி, ஞாயிறு ... வளர்ச்சியில் ... திரு. சி. அருளம்பலம் கூறியதாவது:

## திருமலை மீன்பிடிக்கூட்டுதாபனத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பி. ஞானரத்ன என்ற 22 வயது ரயில்வே நபர்களைக் கைது செய்தனர். (சி. பி. ஏ.)

# செனட்சபை அதிகாரம் கட்டுப்படுத்தப்படும்?

கொழும்பு, திங்கள்

செனட்சபையில்ஏற்பட்ட தோல்விகுறித்து அரசாங்க வட்டாரங்கள் பெரிதும் பரபரப்படைந்துள்ளன.

அரசியல் சட்டத்தின் 13-வது ஷரத்தை மாற்றுவது சம்பந்தமான மசோதா செனட்சபையில் தோல்வியுற்றதால், இனிமேல்என்ன நடவடிக்கை மேற்கொள்வதென்பது குறித்து அரசாங்கத்தின் பெரியதலைவர்கள் தீவிரமாக ஆலோசித்துவருகிறார்கள்.

செனட்சபையில் இந்த மசோதா தோல்வியடைந்ததினால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்குமூன்று வழிகள்தான் இருக்கின்றன என்று பொதுநிர்வாக உள்ளூராட்சி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கூறினார்.

ஆட்சிமன்றக் கூட்டத் தொடரை ஒருநாள் மட்டும் ஒத்திவைத்து எதிர்க்கட்சியினரைத் திருப்திப்படுத்தும் மாற்றங்களுடன் மீண்டும் மசோதாவைத் தாக்கல்செய்வது அல்லது செனட்சபையின் அதிகாரங்களைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது, இதுவுமில்லையென்றால் எல்லாவலை எம் பிக்குஎதிராகத் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு தீர்ப்பில் அவர்குற்றவாளியாகக் காணப்பட்டால் கவர்னர்ஜெனரல் மூலம்மன்னிப்பு அளிக்க ஏற்பாடுசெய்வது. (சி பி ஏ)

# விளையாட்டுப் பொருட்கள்: சுங்கவரி நீக்க முடிவு

கோட்டை, ஞாயிறு

விளையாட்டுப் பொருட்களின் விலையைக் குறைத்து கிராமப்புறங்களில் உள்ள பிள்ளைகளின் விளையாட்டு ஆர்வத்தை அதிகரிக்கச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கு முன்னேடியாக விளையாட்டுப் பொருட்களுக்கு இருந்த சுங்க வரியை நீக்க மந்திரி சபை இன்று முடிவுசெய்தது.

விளையாட்டு அமைச்சர் திரு. கே. பி. இரத்நாயக்கா சுங்கவரியை நீக்குவதென்ற திட்டத்தை மந்திரிசபையில் இன்று சமர்ப்பித்தார். இது சம்பந்தமான மாநாடு ஒன்றையும் விளையாட்டுப் பொருள் இறக்குமதியாளருடன் இம்மாதம் 18ந் திகதி அமைச்சர் கூட்டுகிறார்.

## சிறந்தநெல்தேர்வு

சங்கானை, ஞாயிறு

வரட்சிமிக்க பகுதிகளில் அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய தெனத்கமத் தொழில் இலாகா நடாத்திய பரீட்சையில் 'வெனியூலெற்' என்னும் நெல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது இதனை வலிகாமம் மேற்குப் பகுதியில் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளை சங்கானை கமத்தொழில் விஸ்தரிப்பு நிலைய பொறுப்பதிகாரி தி சின்னையா மேற்கொண்டுள்ளார்.

துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பொதுமக்களுடன் தொடர்புள்ள அரசாங்க இலாகாக்களிலுள்ள அதிகாரிகள் கைலஞ்சம் வாங்குவதாகப் புகார்கள் பல தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து 'கைலஞ்ச' கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்க அதிகாரி தும் வட பகுதி பொலிஸ் அதிபர் உத்தரவிட்டுள்ளார்

கூடிவருவதாகக் கருதப்படும் இக்கைலஞ்ச கைங்கரியத்துக்கு உடந்தையாக இருக்கும் பொதுமக்களும் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என வட பகுதி உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்

# தேங்கிக்கிடக்கும் வெங்காய கூடைகளை வாங்க சம்மதம்

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவு மக்களின் முக்கிய குடிசைக் கைத்தொழிலான வெங்காயக் கூடு பின்னும் தொழில் இப்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு வருவாயைக் கொடுத்து வந்தது. திடீர் என இக்கூடுகளை வாங்குவதில்லையென இங்கு கூடு கொள்வனவு செய்பவர்கள் செய்த முடிவினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது விஷயமாக நெடுந்தீவு கிழக்கு கிராம முன்னேற்றச்சங்கம். நெடுந்தீவு முற்போக்கு வாலிப இயக்கம் ஆகியன தீவுப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்துடன் தொடர்பு கொண்டதன் காரணமாக அரசாங்க அதிபர் தலைமையில் ஐக்கிய மேற்பார்வைச் சபை உறுப்பினர்கள், கூட்டுறவு இயக்க அதிகாரிகள், நெடுந்தீவு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க நிர்வாக உறுப்பினர்கள் நெடுந்தீவு முற்போக்கு வாலிப இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய மகாநாடு ஒன்று யாழ். அரசாங்க செயலகத்தில் கூட்டப்பட்டது.

ஐக்கிய மேற்பார்வைச் சபையினர் தாங்கள் முன்பு கொள்வனவு செய்த வெண்காயக் கூடுகள் விற்கமுடியாதிருப்பதால் தொடர்ந்தும் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் இருப்பதாகக் கூறியபோதிலும் நெடுந்தீவுப் பொதுமக்களின் வருவாய் இதில்அதிகம் தங்கியிருப்பதால் அவர்களிடம் தேங்கிக்கிடக்கும் 500 கட்டுக்கூடைகளையும் ஐக்கிய மேற்பார்வைச் சபையினர் கொள்வனவுசெய்வதாக இறுதியில் ஏற்றுக்கொண்டனர்.

# பீடிப் புகையிலை உற்பத்தியாளர் கவலை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிழக்கிலுள்ள பீடிப்புகையிலைச் செய்கையாளர்களிடம் 17000 ருத்தல் நிறையுள்ள புகையிலை தேங்கிக் கிடக்கின்றது. இதனை வைப்பதற்கு இடம் இல்லை.

யாழ்ப்பாண மாவட்டபதில் அரசாங்க அதிபர் எஸ். சபாரத்தினத்திடம்வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர்திரு. ஆர். தியாகராசா சுழிபுரம் கிராம சபைத் தலைவர் ஆகியோரிடம் நேர்முகமாக முறையிட்டனர்.

புகையிலைச் செய்கையாளர் சார்பில் அரசாங்க அதிபரிடம் சகல குறைகளையும் திரு. ஆ. தியாகராசா எடுத்துக் கூறினார்.

சுழிபுரத்தின் பல்வேறு தேவைகளைச் சுட்டிக்காட்டியும் கூட்டுறவு முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் பீடிப் புகையிலை எடுக்க நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் பீடித் தொழில் நிலையங்களை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆலோசனையை அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

# "'இலங்கைக் கல்லூரிகள் அனைத்திலும் இருமொழி கற்க வசதி வேண்டும்'

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பெற்றோர்தின விழா கல்லூரி அதிபர் திரு என். சிவஞானம் தலைமையில் நடைபெற்றது பிரதம விருந்தினராக வடபகுதிக் கல்வி அதிகாரி திருமதி பாமர் கலந்துகொண்டார். கல்லூரி அதிபர் தமது வருடாந்த அறிக்கையைசமர்ப்பித்துப் பேசினார்.

அதிபர் தமது அறிக்கையில்தெரிவித்ததாவது:

பல்வேறு மொழிகளைப் பேசும்பல்வேறு மதக் கொள்கைகளைப் பின்பற்றும் ஒருநாட்டு மக்கள் ஒற்றுமையாக வாழ விரும்பின் ஒருவர்மேல் ஒருவர் பரஸ்பர நம்பிக்கை வைத்தல் வேண்டும். ஒருவர் மற்றொருவரின் பாரம்பரியத்தை, பண்பாட்டை. மரபைஅறியாமல் அவரின் மேல் அன்பு வைத்தல் முடியாது. இவற்றையெல்லாம் ஒருங்க்க அறிவதற்கு ஒருவர் மற்றவரின் பாஷையை அறிந்திருத்தல் அவசியமாகும்.

இன்று எங்கள் ஆட்சிமன்றத்தின் விவாதங்கள் எல்லாம் பெருமளவில் சுய பாஷைகளிலும் விசேட சந்தர்ப்பங்களில் ஆங்கிலத்திலும் நடைபெறுகின்றன. ஆகவே இலங்கைவாழ் மக்கள் எல்லோரும் இருபாஷைகளையும் அறிந்துகொள்ளாவிடின் மனப்பூர்வமான ஒற்றுமையை அடைதல் மிகக் கடினமாகும ஆகவே எங்கள் வழித் தோன்றல்களாகிய எங்கள் மாணவர்களாவது சிங்களம் தமிழ் ஆகிய இரு பாஷைகளையும் கற்றுக்கொள்ளச் சந்தர்ப்பங்கள் இலங்கையிலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் அளிக்கப்படல் வேண்டும்.

# 'தோல்விகள் வெற்றியின் முதற்படியெனநிரூபித்தவர்'

தாவடி, ஞாயிறு

'கல்லூரி வளர்ச்சியில் பல இன்னல்கள் இருந்தபோதிலும், அதில் முக்கிய பங்கு கொண்டு அதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்து பெருந்தொண்டாற்றியவர் திரு. அருளம்பலம் சமூகத்தின் உதவியைக் கல்லூரி பெற்று வளர்ச்சியுற முன்னேடியாகத் திகழ்ந்து வருமவரே. தோல்விகள் வெற்றியின் முதல்படி என்பதற்கமைய முயற்சியின் பலன் பெற்றவரீ இவர் மூலமாக சமுதாயம் முன்னேறுவதாக"

இவ்வாறு கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தாலும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினாலும் நல்லூர்எம். பி திரு. சி. அருளம்பலத்துக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்திற்குத் தலைமை வகித்துரையாற்றிய அதிபர் திரு. சி. க. கந்தசாமி கூறினார்.

பாராட்டுரை வழங்கிய திரு. த. குமாரசாமிப்புலவர் பேசியபோது. "முயற்சி ஒருபோதும் தோல்வியைத் தரமாட்டாது ஒருமுறையல்ல பல முறை முயன்று வெற்றிக் கிடைக்கும் என்ற உண்மையை நாம் அனுபவரீதியில் காணலாம்.

சங்க இலக்கியங்களிலேயும் சரி, சமயக்குரவர்களும் சரி, பண்டைய நாளில் இருந்தே, தன்நாடு, கிராமம், சமுதாயம் என்பவற்றைப் போற்றிய பெருமையை நாம் காணலாம் சலியாத மனமும் குன்றாத வீர உணர்ச்சியும் கொண்டு முன்னணியில் நின்று எம் சமுதாயத்துக்கும் உழைக்க வேண்டும் என்று கூறினார்.

"மாணவர்கள் விஞ்ஞானம், சட்டம் ஆகியவற்றைத் தமிழிலே படித்துவிட்டுப் பின்னர் ஆங்கிலத்திலே படிப்பதென்றால் மிகவும் கடினம். கல்வியிலே உயர் படிப்பில் தேர்ச்சிபெற வெளிநாடு செல்லவேண்டுமானால் ஆங்கிலம் அவசியம். சர்வ கலாசாலையிலே ஆங்கிலம் கட்டாயபாடமாக்கப்பட வேண்டும்.

கலைச் சொற்களிலே பற்பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதற்கும் வழிவகைகள் காணவேண்டும் என கல்லூரி அதிபர் திரு இ. சபாலிங்கம் கூறினார்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசிய நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் கூறியதாவது:

"இந்து முகாமையாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் சைவசமய அடிப்படையில் வளர்ச்சி பெறவேண்டும். கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி என்பன சைவசமய அடிப்படையில் கலாச்சார வளர்ச்சியுடன் இயங்கி வருவதுடன் அவைகள்எனது தொகுதியில் அமைந்திருப்பதையிட்டும் நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

நம் நாடு, மக்கள், கல்லூரிகள் வளர்ச்சி பெற சிறப்புடன் திகழ பயனுள்ளதான எவ்வெவற்றைச் செய்ய முடியுமோ அவற்றைப் பாகுபாடின்றிச் செய்வேன்.

# 'ஆலயப் பிரவேசத்தால் மட்டும் பிரச்னையைதீர்த்துவிட முடியாது'

யாழ்ப்பாணம். திங்கள்

'சிறுபான்மைத் தமிழ் மக்கள் என்று எவ்வித தடையுமின்றி பரிபூரண சுதந்திரத்துடன் ஆலயத்துட் சென்று வழிபட உரிமைகிடைக்கிறதோ, அதுவே பூரண வெற்றியெனக் கருத முடியும். இவ் வெற்றி கிடைக்க மகாசபை அதன் வழியில் தொடர்ந்து போராடும்'.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்று மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

4-7-70 அன்று மகாசபையின் தூதுக்குழு பிரதமரைப் பேட்டிகண்டது. பேட்டியில் மாவிட்டபுர ஆலயம் சகலருக்கும் திறந்துவிடப்பட வேண்டும். கோயிலுக்குச் செல்பவர்களுக்கு எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படா வண்ணம் கண்காணிக்க பொலிசாரின் பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும், சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்கி அச்சட்டத்தை வலுவுடையதாக்க வேண்டும் என்றும், பிரதமரிடம் குழு வற்புறுத்தி வேண்டிக்கொண்டது.

எங்களுடைய நீண்டகாலப் போராட்டங்களையும் எமது கஷ்டங்களையும் நன்குணர்ந்த பிரதமர் ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எங்களது கோரிக்கைகளுக்கு எல்லாவித ஆதரவும், ஒத்துழைப்பும் தருவதாக வாக்குறுதி அளித்தார்.

பிரதமரைப் பேட்டி கண்டதன் பின்னர் உதவிப் பாதுகாப்பு வெளிவிவகார மந்திரி பொலிஸ் மா அதிபர், அட்டோனிக் ஜெனரல் ஆகியோரையும் பேட்டி கண்டு மாவிட்டபுர ஆலயத்தைப் பற்றிய எமது கோரிக்கைகளைத் தெரிவித்தோம்.

இவற்றைத் தொடர்ந்து அரசாங்கம் அட்டோர்னிக் ஜெனரலின் ஆலோசனையின் பேரில் முடிக்குரிய வழக்கறிஞரை யாழ் நகருக்கு அனுப்பி வைத்தது. முடிக்குரிய வழக்கறிஞர் முதற்படியாக திரு சி. சுந்தரலிங்கத்தின் மேலும், துரைசாமி குருக்களின் மேலும் நீதிமன்றம் மூலம் தடையுத்தரவு பிறப்பித்தார். அதைத் தொடர்ந்து கோயிலைச்சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது. அத்துடன் திறந்திருந்த ஆலயக்கதவும் பூட்டப்படவிடாது. பொலிசாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இப்படியாக அரசாங்கத்தின் முன்னேற்பாடான நடவடிக்கையினால் சிறுபான்மைத் தமிழர் இதுவரை காலமும் உட்செல்ல முடியாதிருந்த இடம் வரைக்கும் உட்சென்று வழிபடமுடிந்தது.

இவ்வாறு மாவிட்டபுர ஆலயப் பிரவேசம் நடைபெறுவதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலையும், பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுத்ததுக்கு எமது மகா சபைதான் காரணமென்பதை

(4-ம் பக்கம் பார்க்க)

திருமலை

# மீன்பிடிக்கூட்டுதாபனத்தில் வேலை நிறுத்தம்

## 50 பேர் வேலைநீக்க எதிரொலி

திருகோணமலை, ஞாயிறு

திருகோணமலை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இன்று முதல் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். 50 ஊழியர்கள் வேலைநீக்கஞ் செய்யப்பட்டதாகவும் இதைத் தொடர்ந்துசுமார் 250 ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஒருவாரச்சம்பளம் வழங்கப்பட்டு, இந்த 50 பேரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டதாகவும். சம்பளத்தைப் பெறுமல் இவர்கள் வெளியேறியதாகவும் தெரிகிறது.

4-ம் பககம் பார்க்க

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

முன்னைநாள் அதிபர் திரு. ஹன்டி பேரின்பநாயகம், திரு. ஏ. ஆர். இராசநாயகம், திரு. மா. ஆனந்தர், திருமதி ச. அமிர்தாம்பிகை ஆகியோருட்படப் பலரும் பேசினர். திரு. புண்ணியலிங்கம் நன்றியுரை கூறினார். தேநீர் விருந்துபசாரமொன்றும், அளிக்கப்பட்டது.


## மரண அறிவித்தல்

### கனகசபை வேலாயுதபிள்ளை

நல்லூர் பிரபல ஆயுள்வேத வைத்தியர் கனகசபை வேலாயுதபிள்ளை காலமாகிவிட்டார். இவர் சித்திரவல்லி அம்மாவின் அன்புக்கணவரும், ஆயுள்வேத வைத்தியர் சிவராமலிங்கம், இந்திராணிபரமசாமி ஆகியோரின் தந்தையும், யாழ்ப்பாணம் இலங்கை வங்கி வி.வி.கே. பரமசாமியின் மாமனாரும் மதிவதனியின்பேரனுமாவர். அன்னாரின் பூதவுடல் 10-ம் திகதி திங்கட்கிழமை மாலை 3-30 மணியளவில் 169ம் இலக்கம், கோவில்வீதி இல்லத்திலிருந்து ஈமக்கிரிகைகளுக்காகசெம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

2136


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எங்கள் பெற்ரேல் நிலையங்களில் கடமையாற்ற ''பம்பர்கள்'' தேவை. பிணைப்பணம் ரூபா 250/-. தகுந்த சிபார்சுகளுடன் விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், யாழ்ப்பாணம்.

2177

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் மத்திய வகுப்பினர் வீடு கட்டுவதற்கேற்ற பதினைந்து துண்டுக் காணிகள் உடன் விற்பனைக்குண்டு. நல்ல தண்ணீர், மின்சாரம் போக்குவரத்து வசதிகள் உள. புகையிரத நிலையத்திற்கும் யாழ்ப்பாணம்— கண்டிவீதிக்கும் அண்மையில் காணித் துண்டுகள் நான்கு தொடக்கம் ஆறு நிலப்பரப்புவரை. பெரியகடையிலிருந்து பஸ் கூலி பதினைந்து சதம். நிலப்பரப்பு விலை ரூபா 500/- மாத்திரம். நல்ல சாதனம் நேரில் மனுச்செய்க. லான்ட் இன்வெஸ்ட்மென்ட். 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

3047

## பாரதி கழகம் வெற்றி

அம்பன், ஞாயிறு

வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து தலைமையல் பொலிகண்டி விளையாட்டரங்கில் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றது விளையாட்டதிகாரி திரு. சு. கதிர்காமத்தம்பி மத்தியஸ்தம் வகித்தார்.

வல்வெட்டித்துறை யுனைற்ரெட் விளையாட்டுக்கழகத்தினருக்கும், பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகத்தினருக்கும், இடையே நடைபெற்ற இக்கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வல்வெட்டித்துறை யுனைற்ரெட் விளையாட்டுக் கழகத்தினரை பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகத்தினர். வெற்றியீட்டினர்.

## பூநகரி கிராமச்சபை கேள்வி விளம்பரம்

1970 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19ஆம் திகதி முற்பகல் 10-30 மணி வரை பரந்தன் வீதியிலிருந்து கறுக்காய்ப்பள்ளம் செல்லும் வீதி வேலைக்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் அக்கிராசனரால் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பிணைப் பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/- செலுத்தப்படல் வேண்டும். இப்பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரங்கள் 18-8-70 அன்று பிற்பகல் 3 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரப் பிரதி அதே நேரத்தில் உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்கேள்வியையும் ஏற்கவோ அல்லது மறுக்கவோ அக்கிராசனருக்கு அதிகாரம் உண்டு. மேலதிக விபரம் அறிய விரும்பின் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

அக்கிராசனர்,
கி. ச. பூநகரி.
கிராமச்சபை - அலுவலகம்,
பூநகரி,
7-8-70.

2398

## தற்கொலை

பல்லவராயன்கட்டு, ஞாயிறு

வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த சபாரத்தினத் என்பவரின் மகள் இராசம்மா (21 வயது) கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## அறிவித்தல்

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்ற
அலுவலகத் தொலைபேசி
இலக்கம் 337.

337 என்னும் தொலைபேசி இலக்கம் 7-8-70ஆம் திகதி முதல் 1-9-70ஆம் திகதி வரை நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்துக்காக நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக சுகாதாரக் கந்தோருக்கு இணைக்கப்பட்டுள்ளது என பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

7-8-70. 2134



## 39 வருட சேவை

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண சைவவித்தியாசாலை அதிபர் திரு. க. சுந்தரம்தமது 39 வருட ஆசிரிய சேவையின் பின் 15-8-70-ல் இளைப்பாறுகிருர் கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்ற இவர் சுன்னுகம்மயிலணி சைவவித்தியாசாலை, மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் என்பவற்றில் உதவி ஆசிரியராய்ப் பணியாற்றியபின் 1955ல்ஏழாலைசைவசன்மார்க்கவித்தியாசாலைக்குதலைமை ஆசிரியராய் நியமிக்கப்பட்டு அவ்வித்தியாசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து மக்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்ருர். 1965-ம் ஆண்டு கொககுவில் ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாசாலை அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவர் வலி வடக்கு தமிழ் ஆசிரியசங்கத்தலைவராகவும் வட இலங்கைத்தமிழ் ஆசிரிய

## யாழ்ப்பாணத்தில்

# மாபெரும் விளையாட்டு விழா!

## 75 மைல் சைக்கிளோட்டம், 10 மைல் பெண்கள்சைக்கிளோட்டம், மரதன்ஓட்டம்!!

— நமது விளையாட்டு நிருபர் ஏ. தேவராசா —

விளையாட்டமைச்சின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் இம்மாதம் பிற்பகுதியில் மாபெரும் விளையாட்டுப் போட்டி நடைபெறவிருக்கிறது.

எழுபத்தைந்துமைல் ஆண்கள்சைக்கிள்ஓட்டப்போட்டி பத்துமைல் பெண்கள் சைக்கிள் ஓட்டப்போட்டி, இருபத்தைந்துமைல்மரதன் ஓட்டப்போட்டி, உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய பல்வேறு போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இம்மாதம் 28-ம் திகதி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் இறுதி விளையாட்டு விழாவிலும், பரிசளிப்புவிழாவிலும் பிரதமவிருந்தினராக ஆட்சிமன்ற விவகார விளையாட்டுப்பகுதி அமைச்சர் திரு. கே. பி. ரத்திநாயக்கா கலந்துகொள்வார்.

### 75 மைல் சைக்கிளோட்டம்

75 மைல் ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி ஊர்காவற்றுறையில் ஆரம்பமாகும். அங்கிருந்து பண்ணை, நாவாந்துறை, வட்டுக்கோட்டை, பொன்னலை திருவடிநிலை, கீரிமலை, காங்கேசன்துறை. தொண்டமானறு, வல்வெட்டித்துறை. பருத்தித்துறை, கொடிகாமம், சாவகச்சேரி வழியாக யாழ். மாநகர சபை முன்றலை வந்தடையவேண்டும்.

### மரதன்

25 மைல் மரதன் ஓட்டப் போட்டி யாழ். -பலாலி வீதி வழியாக மயிலிட்டிச் சந்திக்குச்சென்று காங்கேசன் துறை வழியாக யாழ். முனியப்பர் கோவில் வீதியால் யாழ். நகர மண்டபத்துக்கு அருகாமை வந்தடையும்.

பெண்களுக்கான பத்து மைல் சைக்கிளோட்டம் யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தைச்சுற்றி நடைபெறும்.

இம்மூன்று நிகழ்ச்சிகளுக்குமான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முடிவு திகதி; 15-8-70. திரு. மு. கிருபாகரன். விளையாட்டு அதிகாரி, கச்சேரி. யாழ்ப்பாணம், அல்லது ஏ. முருகையா, விளையாட்டு அதிகாரி, காரியாதிகாரி அலுவலகம், தெல்லிப்பழைஎன்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

எழுபத்தைந்துமைல் சைக்கிளோட்டப் போட்டியில் முதல் பரிசு புத்தம்புதிய சைக்கிள் இதனை அன்பளிப்பாக தனது சகோதரர் காலஞ் சென்ற நாகலிங்கம் நினைவாக வழங்குகிருர் திரு ஈ. மாணிக்கம்.

## ஆடிப்பூரவிழா

யாழ்ப்பாணம், சனி

பன்னலை வரத்தலம் கற்பகப்பிள்ளையார் ஆடிப்பூர விழா கடந்த 5ம் திகதி சிவஸ்ரீ கா. ப. இரத்தினக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

## முன்னேற்றுவதற்கு ஆலோசனை

முசலி, ஞாயிறு

மன்னர் மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் உள்ள விளையாட்டுத்துறைகளை முன்னேற்றுவதற்கான ஒரு ஆலோசனைக்கூட்டம் இம்மாதம் பதின்மூன்றும் திகதி மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

மன்னர், வவனியா மாவட்ட விளையாட்டுப் பரிசோதகர் திரு. ஆர். கே. துரைராஜா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்ருர்.

## சந்தேகத்தில் ஒருவர் கைது

சங்கானை, ஞாயிறு

மாத்தளையைச் சேர்ந்த க. நடராசாவின் மகனை ஜயராம் என்னும் சிறுவன் கதிர்காமத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டதை தொடர்ந்து பொலீசாருக்குக் கொடுக்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து சங்கானை பொலீசைசேர்ந்த கான்ஸ்டபிள்கள் கோணிமொட. விமலதர்ம ஆகிய இருவரும் சுழிபுரத்தைச் சேர்ந்த கயிலாயர் பூரணசிங்கம் என்பவரை பொல்காவலை புகையிரத நிலையத்தில் வைத்து சந்தேகத்தின் மீது கைதுசெய்து றிமாண்டில் வைத்துள்ளனர்.

... ...

## நெடுந்தீவு படகுசேவை

நெடுந்தீவு, ஞாயிறு

## 'பாகுபாடின்றி கல்வி வளர்ச்சிக்கு உழைக்கிறது'

### மக்கள் அரசுக்கு பாராட்டு

தாவடி, ஞாயிறு

''அரசாங்கத்தை எல்லாவற்றுக்கும் நம்பியிராது பெற்ரேர்களும் பாடுபட்டால்தான் பாடசாலை வளர்ச்சிபெற முடியும். கனிஷ்ட பாடசாலைகளை நோககுமிடத்து 100க்கு 60 வீதமான ... பாடசாலைகள் மூன்று நான்கு பரப்பளவைக் ... தாக இருக்கிறது. இதனல்

இளங்கோ இல்லமும்வெற்றியீட்டின

சாம்பியன் இல்லத்தைச் சேர்ந்த, மத்தியபிரிவு செல்வன் த. பேரின்பநாயகனும் கீழ்ப்பிரிவு இ சிவயோகநாதனும், ஆரம்பபிரிவு செல்வி செ. யோகராணியும் கீழ்ப்பிரிவு செல்வி, சி. இ... சேஸ்வரியும் பாராட்டுதலைப் பெற்று சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

வட்டக்கச்சி கிளிநொச்சி பகுதிகளில்

## வெண்சாவி நோயால் வேளாண்மைபாதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்தவருடம்கிளிநொச்சி, வட்டக்கச்சி, 1000-ம்ஏக்கர் பகுதி, முரசுமோட்டை, கனகபுரம் போன்றபகுதிகளில் சிறுபோக வேளாண்மை 'வெண்சாவி' என்னும் நோயால்பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நெற்பயிர் குடலையான காலம் தொடக்கம் நெல் மணி வராதவாறு செய்து ஈற்றில் நெற்கதிர்கள்முழுவதையும் அரிசியில்லாத 'வெண்சாவியாக ஆக்கும் இந்நோயால்சென்ற காலபோக வேளாண்மையிலும் சுமார் 300 ஏக்கர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயஇலாகா அறிக்கையும் கூறுகின்றது

திரும்பவும் இந்த வருடம் சிறுபோகத்திலும் பரவியுள்ள இந்த 'வெண்சாவி' நோய் தடுக்கப்பல கமக்காரர்கள் பயிர் கம்பியான காலம் தொடக்கம் மருந்துகள் அடித்தும் பலன் கிடைக்கவில்லையாம்.

கிளிநொச்சி விவசாய விஸ்தரிப்பு இலாகாவும் பல பயிர்ச்செய்கைக் குழுக்களும் இந்நோயைக் கட்டுப்படுத்தும் வழிகளை ஆராய்வதாகவும் பல சிறுபோகம் விதைத்த கமங்கள் இவ்வெண்சாவிநோய் காரணமாக அறுவடை செய்யாமல் விடவேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

(கு. வி. ம.)

## கூப்பன் அரிசி சிலருக்குக் கிடைக்கவில்லையாம்

நெடுந்தீவு, ஞாயிறு

அரசாங்கம் இலவசமாக கொடுக்கும் கூப்பன் அரிசியை யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவிற்குஏற்றி வரும் ஒப்பந்தத்தை ஏற்று நடாத்திவந்த நெடுந்தீவு பொதுச்சேவை கூட்டுறவுச் சங்கம் தனிநபரிடம் பொறுப்பை கொடுத்தமையால் நெடுந்தீவுமக்களுக்கு கடந்த வாரம் 7 மூடை அரிசிவரை குறைவாகவே விநியோகிக்கப்பட்டது' இதனால் சில குடும்பங்கள் கடந்தவார அரிசிபெருது கஷ்டப்பட்டார்கள். அதேபோன்று இவ்வாரமும் கடைசி நேரத்தில் திங்கட்கிழமை விநியோகிக்கப்படவேண்டிய அரிசி திங்கட்கிழமைதான் நெடுந்தீவிற்கு வந்து சேர்ந்தாம்.


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

என், எஸ். கிருஷ்ணன்
ரி. ஏ. மதுரம் - டெய்ஸி ராணி
நடித்த

67-ல் என்.எஸ்.கிருஷ்ணன்

(எஸ், ரி. ஆர். பிலிம்ஸ்)

அமரர் அண்ணு, தமிழக முதலமைச்சர் மு. கருணுநிதி, திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

KALANILAYA CAMBRIC
கலாநிலைய கேம்பிறிக்
WRITING PADS
'லெற்றர் பாட்ஸ்'

நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்
விற்பனைக்குண்டு

மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:

'ஈழநாடு'
(வர்த்தக அச்சகப் பகுதி)

55, வெள்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அண்ணு, தமிழக முதலமைச்சர்
மு. கருணநிதி, திருமுருக கிருபானந்தவாரியார்
ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.
பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய
நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ் ஜெயந்தி
தினசரி 3 காட்சிகள் நடித்த
**இரு கோடுகள்**

வின்ஸர் 2-வது வாரம்
(யாழ்ப்பாணம்) * ராஜம் * புவனேந்திரம்
தினசரி 4 காட்சிகள் நடித்த
**வெண்சங்கு**

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'
**துணைவன்**
கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாசாலை அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவர் வலி வடக்கு தமிழ் ஆசிரியசங்கத்தலைவராகவும் வட இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கம், அகில இலங்கைத் தமிழ் ஆசிரியசங்கம் என்பவற்றின் நிர்வாக உறுப்பினராகவும் ஏழாலை தென்மேல் இந்துசமய அபிவிருத்திச் சங்கசெயலாளராகவும், வடமாகாண ஆசிரியசகாயநிதிச் சங்க நிர்வாகஉறுப்பினராகவும் பல வருடங்கள்சேவை செய்து இப்போது கொக்குவில் நந்தாவில் மனோன்மணி இந்துசமய அபிவிருத்திசங்க உபதலைவராகத் தொண்டு புரியும் இவர்ஒரு சிறந்தசமூகத்தொண்டர் மட்டுமன்றி சோதிடக் கலைவல்லுனருமாவர் அன்னாரின் சேவைநலன் பாராட்டுவிழாவும், பிரியாவிடைவிழாவும் பாடசாலை மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் கொண்டாடப்படும்.

—பழையமாணவன்

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
**தாயைக் காத்த தனயன்**
நாளை முதல்
பேசும் தெய்வம்

2-வது வாரம்
**வெல்லிசினிமா**
மாலிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ஷீலா — சத்யன் — மது
நடித்த
**செம்மீன்**

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre poya 4 Shows
Rod Taylor,
Yvette Mimieux
in
THE MERCENARIES

MANOHARA
JAFFNA
Daily 4-30, 7-00 & 9-45 p.m
Poya days 10-30 a. m.
Shakespear's
ROMEO
and
JULIET
(Is no ordinary
Love Story)
Starring- 15 years old
OLIVIA HUSSEY (Girl)
17 years old LEONARD-WHITING (Boy)

... 100 க்கு 60 வீதமான ...ய பாடசாலைகள் மூன்று நான்கு பரப்பளவைக் கொண்ட காணிகளுள்தான் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் இப்பாடசாலைகளில் நல்ல விளையாட்டு மைதானமோ அன்றி நூல் நிலையங்களோ இல்லை. இதனால் பிள்ளைகளின் மனதில் வெறுப்புத்தான் தோன்றுகிறது. எப்போது பெரிய பாடசாலைக்குச் செல்வோம் என்று பிள்ளைகளும் பெற்றோர்களும் எண்ணுவார்கள். இந்நிலைமாற பெற்றோர்கள் முன்வந்து உதவவேண்டும். இதனால் கல்வி வளர்ச்சியடைய ஏதுவாகும்.''

இவ்வாறு, தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டியின்போது பிரதம விருந்தினராக கலந்துரையாற்றிய உடுவில் வட்டார வித்தியாதரிசி திரு இராசா கூறினார்.

இளைப்பாறிய வைத்திய அதிகாரி திரு கு தம்பையா கொடியேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார். வழக்கறிஞர் திரு மு மதியாபரணம் தலைமைவகித்த இவ்வைபவத்தில் திரு. இராசா மேலும் பேசுகையில்:-

''பணக்காரர் ஏழை என்ற பாகுபாடின்றி கல்வியில் வளர்ச்சியுற இன்றைய அரசாங்கம் உழைத்துவருகின்றது'' என்றார்,

தாவடி வேதவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் வள்ளுவர் இல்லம் சாம்பியனானது இரண்டாவதாகக் கம்பர் இல்லமும், மூன்றாவதாக ... பிரிவு செல்வி. சி. இ...சேஸ்வரியும் பாராட்டுதலைப் பெற்று சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அஞ்சல் ஓட்டத்தில் 'கம்பர் இல்லம்' சாம்பியனானது.

செம்பு ஓட்டம்:-

செல்விகள் இ. பிரேமா (வ. இ) சி, சிவசோதி (வ. இ.), சி. திருக்கேதீஸ்வரி (இ இ.).

தடையோட்டம்: மத்திய பிரிவு'

ஆண்கள் ஐ. திலகசிங்கம் இ இ.), த. பேரின்பநாயகன் (வ.இ.), ந. பூலோகநாதன் (க.இ.).

பெண்கள்: செ. சோபனு (க.இ.), த. குணவதி (வ.இ.) அ. பாலசரசா (க. இ):

கீழ்ப்பிரிவு: ஆண்கள் இ. இராசசேகரம் (க.இ.), ந ரமணகுமார் (இ. இ.), மா. சண்முகநாதன் (வ. இ.).

பெண்கள்: ச. சந்திரவதி (வ. இ), மா. இராசேஸ்வரி (இ. இ.), பொ. பத்மராணி க. இ..

200 மீற்றர் மத்தியபிரிவு பெண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தில் ந. கலாரஞ்சனி [இ இ], முதலாவதாகவும் இ. பிரேமா (வ. இ) இரண்டாவதாகவும், அ. பாலசரசா (க. இ) மூன்றாவதாகவும் ஓடி வெற்றிபெற்றனர். மற்றும் விநோத உடைப்போட்டி பழைய மாணவர் ஓட்டம் என்பனவும் இடம்பெற்றன.

வட்டார வித்தியாதரிசி திரு. இராசா பரிசுகளை வழங்கினார். தலைமையாசிரியர் திரு. வி. இராசசிங்கம் நன்றி கூறினார்.

# 'அகந்தையும் சுயநலமும் விளையாட்டினால் அகலும்'

## விருந்து வைபவத்தில் வண. பிதா

முசலி, ஞாயிறு

'விளையாட்டுத்துறையில் நாம் பலவிதமான பண்புகளைக் கற்றுக்கொள்ளலாம். அகந்தை, சுயநலம், தற்பெருமைபோன்ற தீயபண்புகளைக்கொண்ட ஒருவன் விளையாட்டில் பங்குகொள்ளும் போது தீய குணங்கள் அகன்று விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை சேர்ந்து வாழும் விருப்பு முதலிய நற்பண்புகள் ஏற்படுகின்றன' என யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்-மேரிஸ் கழகத்துக்கும், மன்னார் மாவட்டத்தில் சென்ற வருடம் சாம்பியனாக வந்த வங்காலை புனித ஆனாள் விளையாட்டுக் கழகத்திற்கும் வங்காலைக் கிராமசபை மத்திய மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியையொட்டி நடைபெற்ற விருந்துபசார வைபவத்தில் வங்காலை கட்டளைக்குரவர் வண. பிதா பெனட் கொன்ஸ்ரன்ரைன் கூறினார்.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறைக் கோஷ்டி வங்காலைக் கோஷ்டியை 3-1 கோல்களால் வெற்றியீட்டியது. இவ்விளையாட்டுக்கு ஞானப்பிரகாசம் மொறாய்ஸ் ஆசிரியர் மத்தியஸ்தம் வகித்தார்.


மற்றும் வங்காலை புனித ஆனாள் விளையாட்டுக்கழகத் தலைவர் திரு. யோசப் ஜார்ஜ் நாவாந்துறை சென் மேரிஸ் கழகத்தைச் சேர்ந்த ஏ மைக்கேல் தாசன் ஆகியோரும் உரையாற்றினர்.

## நெடுந்தீவு படகுசேவை

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகு சேவை இராஜேஸ்வரி மோட்டார் படகின் இயந்திரம் ஒன்று பழுதடைந்தமையால் ஸ்தம்பிததிருந்தது மூன்று நாட்கள் இடைவேளைக்குப்பின் மீண்டும் தொடர்ந்துசேவை நடைபெறுகிறது மோட்டார்ப் படகுசேவை ஸ்தம்பித்தமையால் தபால் சேவையும் துண்டிக்கப்பட்டிருந்தது.

(வர்த்தக அச்சகப் பகுதி)
55, சிவன்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.
சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-
**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்**
420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்



புதிய, பாரமற்ற
**ஹேஸ்ப்ரே 350 பீ.டி.**
தட்டி விட்டதும் இயங்கும் சுலபமான விசையுடைய பீச்சு முனை கொண்டது.
பீச்சு முனையில் தட்டிவிட்ட மாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை உள்ளதால் வெளியே சிவிறப்படும் மருந்தின் அமுக்கத்தை குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளவுக்குக் கட்டுப்படுத்த ஏதுவாகிறது. இது விசேஷமாக தேயிலையில், பயிர்களுக்குச் சேதம் விளையும் என்ற பயமில்லாமல் களைக் கொல்லிகளை தெளிக்கப் பயன்படுகிறது.
அழுங்கிப் போகாத, துருதடுப்புப் பிளாஸ்டிக்கினால் ஆன 3½ கலன் தாங்கி சௌகரியத்திற்கும் சுலபமாக இயக்குவதற்கும் என்றே உருவானது. பம்பைப் பராமரிக்கத் தேவையில்லை. தொடர்ந்து உச்ச அமுக்கத்தை நிலைபெறச் செய்யலாம்.
உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.
VISION 75/70
தயாரிப்போர்:
ஹேலீஸ் லிமிட்
400, டீன்ஸ் ரோட், கொழும்பு 10.
தொலைபேசி: 96331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காஸிய அமைதி முயற்சிகள் ஆரம்பம்

## குணர் ஜாரிங் விரைவில் இருதரப்பினரையும் சந்திப்பார்

வாஷிங்டன், ஆகஸ்ட் 9
அமெரிக்காவின் அமைதி யோசனைகளை மேற்காசிய நெருக்கடியில் நேரடியாக சம்பந்தப்பட்ட முக்கியநாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு நேற்று நள்ளிரவு முதல் போர் ஒய்வுஏற்பட்டுள்ளது.

சூயஸ்கால்வாய்ப் பகுதியில் துப்பாக்கிகள குமுறும் சப்தம் ஒய்ந்திருந்தது என்ருலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த அரபு கொமாண்டோக்கள் போர் ஒய்வை முறியடிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

இதேசமயம் அரபுநாடுகளின் பிரதிநிதிகளோடும் இஸ்ரேல் பிரதிநிதிகளோடும் அமைதிக்கான பூர்வாங்கப் பேச்சுககளை ஐ. நா. அமைதித் தூதுவர் டாக்டர் ஜாரிங் ஆரம்பித்துள்ளார், அவர் இந்தப் பூர்வாங்கப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு மேற்காசியாவுக்குப் போவார் என்று தெரிகின்றது.

அரபுநாடுகளின் வெளிநாட்டமைச்சர்களோடும், இஸ்ரேல் மந்திரிகளோடும் டாக்டர் ஜாரிங் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டியதுதான் பாக்கி என்று இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் திரு. அபா ஈபான் நேற்றுக் கூறினுர்.

# மேற்கு ஜெர்மன் பிரதமர் விரைவில் மாஸ்கோ போவார்

பொன், ஆகஸ்ட் 9
மேற்கு ஜெர்மன் பிரதமர் ஹெர்வில்லி பிரான்ட் சோவியத் யூனியனுக்குப் போகவிருக்கிருர்,

கடந்த வெள்ளிக்கிழமை சோவியத் யூனியனுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையில் ஏற்பட்ட படை பல பிரயோகத்துக்கு எதிரான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக வில்லி பிரான்ட் மாஸ்கோ செல்லவிருக்கிருர்.

சோவியத் வெளிநாட்டு அமைச்சரும், மேற்கு ஜெர்மன் வெளிநாட்டமைச்சரும் கடந்த சில தினங்களாக மாஸ்கோவில் கூடி பேசியதின் விளைவாக இந்த உடன்படிக்கை ஏற்பட்டது. படைபலத்தைப் பிரயோகிப்பதில்லை என்பது சம்பந்தமாக இந்த இரு மந்திரிகளும் ஆலோசனைகள் நடத்தியபின் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இது பூர்வாங்கமாகவே கைச்சாத்திடப்பட்டது இந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளின் பிரதமர்களும் வேருெரு தினத்தில் உத்தியோகபூர்வமாகக் கைச்சாத்திடுவார்கள்.

மாஸ்கோவில் ஏற்பட்ட உடன்படிக்கை பற்றிய விபரங்கள்பற்றி மேற்கு ஜெர்மன் மந்திரிசபை சுமார் 4 மணி நேரம் நேற்று ஆலோசனை நடத்தியது. மேற்கு ஜெர்மன் வெளிநாட்டமைச்சர் ஒப்பந்தத்தின் விபரங்கள் பற்றி கூட்டத்தில் விளக்கினுர், அதன் பின்னர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதென்று முடிவுசெய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவகற்கு மாஸ்கோவிற்குப் போவதற்கு மேற்கு ஜெர்மன் பிரதமமந்திரி ஒப்புக்கொண்டிருக்கிருர், அவர் மாஸ்கோவுக்குப் போவதை மந்திரிசபை இன்னும் அங்கீகரிக்கவில்லை, மந்திரிசபையின் முடிவைப் பொறுத்து எப்பொழுது போவதென்பதுபற்றி முடிவு செய்யப்படும் என்று தெரிகின்றது.

மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் ஒரு வைபவத்தில் மேற்கு ஜெர்மன் பிரதமமந்திரி ஹெர்பிரான்டும். சோவியத் பிரதமர் குரோமிக்கோவும் கைச்சாத்திடுவார்கள்.

## ஆயுட்காலப் பிரபுவாக நியமனம்

லண்டன், ஆக. 9
முன்னுள் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் ஒருஆயுட்காலப் பிரபுவாக நியமனம் பெற்றுள்ளார். மொத்தம் எட்டுப் பேருக்கு இன்று ஆயுட்காலப் பிரபுக்கள் பட்டம் வழங்கப்பட்டுள்ளன.

55 வயதுடைய திரு. பிரவுண் 1945-ம் ஆண்டில் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்கடந்தபொதுத்தேர்தலில்தோல்வி அடையும்வரை அவர் பாராளு மன்றத்தில் அங்கம் வகித்து வந்திருக்கிருர். ஐரோப்பிய கவுன்சில் ஆலோசனை மகாநாட்டில் பிரிட்டிஷ்பிரதிநிதியாக அவா பங்குபற்றியதுடன் ஐரோப்பிய சங்கத்தின் உப தலைவராகவும் பதவி வகித்திருக்கிருர்.

முன்னுள் பிரதமர் திரு. ஹரல்ட் வில்சனின் சிபார்சை அடுத்து மொத்தம் 37 பேருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன. இவர்களின் எண்மருக்கு ஆயுட்காலப் பிரபுக்கள் பட்டமும் எழுவருக்கு சேர் பட்டமும் இருவருக்கு பிரிவுக்கவுன்சில் அங்கத்துவப்பட்டமும் வழங்கப்பட்

## கி. பாகிஸ்தானில் வாழ்ந்த வங்காளப்புரட்சிச் சிங்கம் காலமானுர்

புதுடில்லி, ஆக 9 வந்த அவர் சில தினங்

## இடதுகையைத் துண்டித்து லிங்கத்துக்கு இரத்தபிஷேகம்

### 26 வயது வாலிபரின்பக்திப்பிரவாகம்

நாகபட்டினம், ஆகஸ்ட் 9
தனது கையை கத்தியால் வெட்டித்துண்டாடிகாயத்திலிருந்து வழிந்தோடிய இரத்தத்தை லிங்கத்தின் மேல் விட்டு சுமார் 5 நிமிடங்கள் வரைஅபிஷேகம் செய்தார் 26 வயது வாலிபரொருவர்.

இப்பரபரப்பூட்டும் சம்பவம் அண்மையில் தமிழ் நாட்டில் நாகபட்டினம் அருகே நடந்துள்ளது.

நாகபட்டினத்திலிருந்து சுமார் இரண்டுமைல் தூரத்தில்உள்ள கல்லடிமேடு என்ற இடத்தில் சிவன் கோவிலொன்றுள்ளது. அந்தப் பாழடைந்த கோவிலில் லிங்கம் மாத்திரமேவைக்கப்பட்டுள்ளது.

வேலப்பன் என்ற வாலிபர் நிவேதனப் பொருட்களுடன் கத்தியொன்றையும் எடுத்துக்கொண்டு இக்கோவிலுக்குவந்து சிவலிங்கத்துக்குப் பூசைசெய்துவிட்டு லிங்கத்துக்கு அருகில் உள்ள கல்லொன்றில் தனது இடது கையை வைத்து கத்தியால்வெட்டி இரத்தத்தால் அபிஷேகம் செய்துவிட்டு மயங்கிய நிலையில் வீடுபோய்சேர்ந்தார்.

அவரை பெற்ருேர் அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர். இடதுகைதுண்டாடப்பட்டுள்ளதால் அக்கையால் இனி அவர் ஒன்றுமே செய்யவியலாது.

'நான் வணங்கும் தெய்வத்தக்கு என்னுடைய விருப்பப்படியே அபிஷேகம் செய்துவிட்டேன்' என்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்பு அந்த வாலிபர் கூறினுர்.

16 வயதிலிருந்து அவருக்கு சிவபக்தி அதிகமென்று அவருடைய தாயார் தெரிவித்தார்.

## இலங்கை வந்த சரக்குக்கப்பல் விபத்தில் மாண்டவர்களுக்குநிதிஉதவி

### "ஒவ்வொரு குடும்பத்துக்கும் 1000 ரூபா வழங்கப்படும்"

— கருணுநிதி

சென் , ஆகஸ்ட் 9
தூத்துக்குடியிலிருந்து கொழும்புத் துறைமுகத்து வெங்காயம் ஏற்றிக்கொண்டு வரும்போது விபத்தில் பலியாகிவிட்ட பதிளுறு பேரின் குடும்பங்களுக்கு தமிழக அரசு தலா 1000ரூபா வீதம் உதவிப்பணம்கொடுக்கிறது. தமிழக முதல்வர் கருணுநிதி இத்தகவலை அறிவித்துள்ளார்.

'உதவி செய்யுங்கள் என்று நாங்கள் மனுப்பண்ணவில்லை. அதற்குள் தொழிலாளர்களின் குடும்பங்களைக் காப்பாற்ற தமிழ்நாடு அரசாங்கம் உதவிப்பணம் வழங்கியுள்ளது.

முன்பு காங்கிரஸார் ஆட்சி செலுத்திய காலத்தில் ஒருவர் இவ்விதம் விபத்தில் மாண்டுபோகவே அவர்

படகுத் தொழிலாளர் சங்க செயலாளர் எலியாஸ் பூபாலராயர் 'கருணுநிதியின் நிதி உதவி சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## சம்பந்தம்- எம்.பி. தி மு.க.விலிருந்து நீக்கப்பட்டார்

சென்னை, ஆகஸ்ட் 9
இந்திய ஆட்சிமன்ற திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. எஸ். சே சம்பந்தம் கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கிவைக்கப்பட்டிருப்பதாக ... பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறிமா கோஷ்டிபதவிக்குவந்ததால்

# மூன்று ஆண்டுகாலமாவது அமைதியாக இருப்பாராம்

## ஆர். ஜி. சேனநாயக்கா கூறுகிருர்

கோட்டை, ஞாயிறு
சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்கு தாம் மேற்கொண்டுவந்தபோராட்டங்களின் பலன்கள் இப்பொழுது கிடைக்கத் தொடங்கிவிட்டதால் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குத் தாம் ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்புவதாக சிங்கள மகாஜனக்கட்சியின் தலைவர் ஆர். ஜி. சேனநாயக்கா தெரிவித்திருக்கிருர்.

கடந்தபொதுத்தேர்தலில் 51 தொகுதிகளில் போட்டியிட்டுப்படுதோல்வி கண்ட சிங்கள மகாஜனக்கட்சியின் தலைவர் திரு. ஆர் ஜி சேனநாயக்கா இப்பொழுது கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் சுகவீனம் காரணமாக சிகிச்சைபெற்றுவருகின்ருர்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்க அம்மையாரின் தலைமையிலான கூட்டணியினர் இம்முறை பெற்றபிரமாதமான வெற்றியைத் தமது சொந்த வெற்றியாகத்தாம் எண்ணுவதாகவும், இந்த வெற்றி கிடைக்காவிடில் சிங்களவர்களாக இந்த நாட்டில் வாழ்வதில் பிரயோஜனமில்லையென்றும்திரு சேனநாயக்கா கூறியிருக்கிருர்.

கடந்தபொதுத்தேர்தலின் போது டட்லி அண்ணன் போன இடமெல்லாம் தமிழர்களுக்கும் ஓர் இடம் கொடுப்பதுபற்றித் தான் பேசினுர். நானே சிங்களவர்களுக்குரிய இடத்தைப் பெற்றுக் கொடுப்பதுபற்றியே பேசினேன். அம்மையாரும் சிங்களவர்களுக்குரிய இடத்தைப் பெற்றுத் தருவது பற்றித்தான் பேசினுர். நான் எவ்வளவுதான் சிங்களவர்கள் பற்றிபேசினுலும் எனதுகட்சியினுல் நாட்டில் அரசாங்கம் அமைக்கமுடியாது என்பதை மக்கள் நன்கு தெரிந்துவைத்திருக்கிருர்கள். அதனுல் நேரடியாகவே அம்மையாரின் கோஷ்டியினருக்கு வாக்களித்து அவர்களையே பதவிக்கு அனுப்புவதற்கு மக்கள் முடிவு செய்திருக்கிருர்கள்."

இவ்வாறு திரு சேனநாயக்கா தமது கட்சி கடந்த தேர்தலின் போது தோல்வியுற்றது பற்றிக்குறிப்பிடுகையில் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி தோல்வியுற்றது பற்றிசற்றும் கவலைப்படவில்லையென்றும், நாடு. இனம் குறித்து தாம் எதிர்பார்த்த நிலைமை இம்பொழுது ஏற்பட்டிருப்பதாகவும், இதனுல் எதிர்காலத்தில் தாம் போராட்டம் நடத்தவேண்டிய அவசியமில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்

'றிவிரெஸ' பத்திரிகையில் வெளியாகியுள்ள பேட்டியொன்றில் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா இவைகளைத் தெரிவித்துள்ளார்.

## 'ஈட்டிய வெற்றியைப் பேணுதல் வேண்டும்'

பருத்தித்துறை, ஞாயிறு
'எமதுமுன்னணி அரசாங்கத்தை இரு பிரச்சினைகள் பிரதானமாக எதிர்நோக்கியுள்ளன, ஒன்று ஈட்டிய வெற்றியைப் பேணுதல், மற்றது தொடர்ந்துபோராடிப் பல சாதனைகளை நிலைநாட்டுதல் இப் போராட்டத்தில் நாட்டு மக்கள் அரசாங்கத்திற்குப் பக்க பலமாக நிற்கவேண்டியது அவசியம்.

இவ்வாறு கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர் திரு. பொன் குமாரசாமி கரவெட்டியில் நடைபெற்ற வாலிபர் முன்னணிக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார். திரு கே. சேனுதிராசா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்:

தொடர்ந்து திரு குமாரசாமி கூறியதாவது;

இன்றைய அரசாங்கம் நாட்டு மக்களின் முக்கிய பிரச்னைகளான வாழ்க்கைச் செலவு வேலையில்லாத் திண்டாட்டம் வீட்டுப் பிரச்னை ஆகியவற்றைத் தீர்க்கப் போவது நிச்சயம். குறிப்பிடக்கூடியளவு நிவாரணம் சோஷலிச முறைகள் மூலம் அளிக்கப்படும். இந் நிலையில் நாட்டின் இதர மக்களுடன் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து முன்னேற வேண்டியது அவசியம்

கரவெட்டிப் பகுதியில் விலைக்கு வாங்கிய நிலத்தில் வாலிபர்சங்கத்துக்கான கட்டடம் அமைக்க வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## திருமலையிலும் சிங்களவர் தள்ளப் படுகிருர்களாம்

கோட்டை, ஞாயிறு
திருகோணமலைப் பகுதியில் முடிக்குரிய காணிகளை இரகசியத் திட்டமொன்றின் மூலம் சிங்களவர்களல்லாதவர்களின் 'பூதல்' சொத்தாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படும் நடவடிக்கைகள் குறித்து காணி விவசாய அமைச்சர் திரு ஹெக்டர் கொப்பக்கடுவ பூரண விசாரணையொன்றை நடத்துகிருராம்.

'றிவிரெஸ' பத்திரிகை

சிங்களவர்களல்லாதவர்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாவதன் காரணமாகப் பழம் பெரும் பௌத்த ஸ்தலங்களுக்கும் ஊறுவிளைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

......

## சிறுவர் கலைவிழா

திருநெல்வேலி, ஞாயிறு
யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மாலை 6 மணியளவில் வண்ணுர்பண்ணை, நல்லூர். உடுவில் சிறுவர் பாட

## புதிய தலைவர்



# வங்காளப்புரட்சிச் சிங்கம் காலமானர்

புதுடில்லி, ஆக 9

இந்திய பிரிவினைக்கு முன்னர் வங்காளத்தின் புரட்சி சிங்கமாக விளங்கியவரான தைலோக்நாத் சக்ரவர்த்தி நேற்றிரவு காலமானர். மாரடைப்புக்குப் பலியான அவருக்கு 82 வயது. விடுதலைக்குப் பின்னர் கிழக்குப் பாகிஸ்தானிலேயே இருந்து வந்த அவர் சில தினங்களுக்கு முன்பே இந்தியாவுக்கு வந்தார். கிழக்குப் பாகிஸ்தானில் மைமீன்சிங் ஜில்லாவில் அவர் வசித்து வந்தார். தம் வாழ்க்கையையே புரட்சிக்கு அர்ப்பணித்த அவர் சுமார் 30 ஆண்டுகள் சிறையில் இருந்துள்ளார்.

டேட் கொலை வழக்கு

# வழக்கறிஞருக்கு 3 நாள் சிறைத் தண்டனை

## நிக்ஸன் கருத்து ஜூரிகளை கட்டுப்படுத்தாது

லொஸ்ஏஞ்சல்ஸ், ஆக. 9

ஷேரான்டேட் கொலை வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்று நீதியரசர் சார்லஸ்ஒல்டர் தெரிவித்துள்ளார்.

சார்லஸ் மான்ஸன் குற்றவாளி என்று ஜனதிபதி நிக்ஸின் கூறிய கருத்து ஜூரிகளிடையில் செலாவணி பெறவில்லை என்று கூறி நீதி விசாரணைக்குபங்கம் நேர்ந்துவிட்டதென்ற பிரதிவாதி வக்கீல் மனுவைத் தள்ளுபடி செய்தார்.

''மான்ஸன் குற்றவாளி என்கிறர் நிக்ஸன்'' என்ற தலைப்புடன் செய்தி வெளியிட்ட பத்திரிகையொன்றை இவ்வழக்கின் எதிரியான மான்ஸன் ஜூரிகளிடம் பிரித்துக்காட்டினர். இதனால் விசாரணை தடைப்பட்டது.

எதிரியின் கைக்கு எட்டுமிடத்தில் வேண்டுமென்றே இப்பத்திரிகையை வைத்ததன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்ததாக கூறி வழக்கறிஞர் தேயிஷினுக்கு மூன்று இரவுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

நிக்ஸன் அறிக்கை வெளிவந்ததும், அவ்வறிக்கையை பிரசுரித்த பத்திரிகைகளை ஜூரர்களுக்கு கிடைக்க முடியாமல் செய்ததாக நீதியரசர் தெரிவித்து அவர்களுக்கு தொலைபேசி, தொலைக்காட்சி முதலியன தடை செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

கொலை வழக்கு எதிரிகளில் ஒருவரான திருமதி வின்டா கஸாபியான் (வயது 21) பிராசிக்கியூசன் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

## சுட்டுக் கொலை

புதுடில்லி, ஆகஸ்ட் 9

வலதுசாரி சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. பசங்சிங் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். பட்டியாலாவுக்கு அருகில் இவரை ஜீப்பொன்றில்வந்த நபர்கள் சுட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். பஞ்சாப் எம். எல். ஏ. ஆன அவர் ஸ்தலத்திலேயேமரணமானதாகத் தெரிகின்றது.

## 'தேசிய மயமாக்குங்கள்'

உடுப்பிட்டி, ஞாயிறு

'ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதுபோல் உடனடியாகத் தோட்டங்களையும், வங்கிகளையும் தேசியமயமாக்க வேண்டும்'

இவ்வாறு வதிரி கம்யூனிஸ்ட் வாலிப முன்னணிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. ஆர். இராஜ் கேட்டுக்கொண்டார்.

திரு. பொன் குமாரசாமி பேசும்போது, நாட்டிலுள்ள பிற்போக்குச் சக்திகள் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எந்த நேரத்திலும் தயாராக இருக்கின்றன. நாட்டைக் காப்பதில் கம்யூனிஸ்ட்டுக்கள் அயராது பாடுபட வேண்டும். அரசாங்கம் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டத் தயங்கக்கூடாது' என்று குறிப்பிட்டார்.

பட்டங்கள் வழங்கப்பட்டன. இவர்களின் எண்மருக்கு ஆயுட்காலப் பிரபுக்கள் பட்டமும் எழுவருக்கு சேர் பட்டமும் இருவருக்கு பிரிவுக்கவுன்சில் அங்கத்துவப்பட்டமும் வழங்கப்பட்டன.

முன்னாள் காலனித்துவ மந்திரியாகவும் பின்பு வீடமைப்பு உள்துறை அமைச்சராகவும் பதவி வகித்த திரு. அன்தனி கிறீன்வூட்டிற்கும் ஆயுட்கால பிரபுப்பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. முன்னாள் வேல்ஸ் விவகார ராஜாங்க மந்திரியான திருமதி எரின் வைட். கல்வி விஞ்ஞான இலாகாவின் முன்னாள் ராஜாங்க மந்திரியான செல்வி அலிஸ் பேக்கன், முன்னாள்கலைத்துறைராஜாங்க மந்திரியானசெல்வி ஜெனிலீ ஆகியோருக்கு கோமகள் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

புதுக்காங்கிரஸ்

## தேர்தல் சின்னம் 'தென்னை'

திருவனந்தபுரம், ஆக. 9

கேரள இடைத்தேர்தலில் புதிய காங்கிரஸ் தன்னுடைய தேர்தல் சின்னமாக தென்னை மரத்தை தேர்ந்தெடுத்துள்ளது. அகில இந்திய காங்கிரஸ் கட்சி பிளவுபட்டதனால் காளைச்சின்னம் யாருக்கு என்பதில் இருகட்சிகளும் வழக்குத்தொடர்ந்துள்ளன. விசாரணை முடியும்வரை இருகட்சிகளும் காளைச்சின்னத்தை தங்கள் தேர்தல் சின்னமாக பாவிக்கக்கூடாதென தேர்தல் கமிஷன் முடிவுசெய்துள்ளது.

அடுத்த மாதம் கேரளாவில் இடைத்தேர்தல் நடைபெறுவதால் இந்திராகாந்தி தலைமையிலான புதுக்காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடுவதற்கு, தென்னை மரத்தை தேர்தல் சின்னமாக தேர்ந்தெடுத்துள்ளது.

## நிவாரணம் வழங்குக

அம்பன், ஞாயிறு

தொண்டமானாற்றுக் கடலில் மீன்பிடிக்கச்சென்று கடற்படை படகினால் மோதுண்டு இறந்த கந்தசாமியின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்றநடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று அரசாங்கத்தையும், பருத்தித்துறை எம். பி. யையும் கிழைக்கரை அபிவிருத்தி முன்னணியினர் கேட்டுள்ளனர்.

காப்பாற்ற தமிழ்நாடு அரசாங்கம் உதவிப்பணம் வழங்கியுள்ளது.

முன்பு காங்கிரஸார் ஆட்சி செலுத்திய காலத்தில் ஒருவர் இவ்விதம் விபத்தில் மாண்டுபோகவே அவர் குடும்பத்துக்கு நிதி உதவி அளிக்கும்படி மனுப்பண்ணினேம். ஒரு வருடத்தின் பின்னர் தான் பணம் கிடைத்தது. தற்போது விபத்து நடைபெற்ற ஒரு வார காலத்திலேயே தி. மு. க. அரசு உதவிப்பணம் வழங்கியுள்ளது. மூவாயிரம் தொழிலாளர்களின் சார்பில் அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்'.

## நெல்லியடி சுதந்திரக்கட்சி கிளை

உடுப்பிட்டி, ஞாயிறு

''உண்மையான சோஷலிச அமைப்புத்தான் இந்நாட்டுக்கு ஏற்றது. தமிழர்கள் ஒன்று சேர்ந்து கூட்டணிக்கு ஆதரவு நல்குவதால் புதிய சமுதாய அமைப்பை ஏற்படுத்தும் சுமூகமான நிலை ஏற்பட்டுள்ளது''

மேற்கண்டவாறு சிறீலங்கா சுதந்திரக்கட்சி நெல்லியடிக் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் திரு. வை: சிவயோகநாதன் குறிப்பிட்டார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ள நாட்டியாலயா மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வை. சிவயோகநாதன், உபதலைவர்: திரு. எஸ். வல்லிபுரம். செயலாளர்: திரு. எம். சிவலிங்கம், பொருளாளர்: திரு. எம். நாகராசா.

ஐவரடங்கியநிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## கால்நடைகள் இறக்கின்றன

அம்பன், ஞாயிறு

நாகர்கோயில், குடாரப்புப் பகுதியில் வெப்பநிலை அதிகரித்து வருவதினால் இப்பகுதியிலுள்ள கால்நடைகள் நாளுக்குநாள் இறக்கின்றன இந்நோய் மேலும் பரவாது தடுப்பதற்கு வடமராட்சிப்பகுதி அரசினர் கால்நடைவைத்தியர் திரு. கே. தம்பித்துரை நோய்த் தடுப்பூசி ஏற்றிவருகிறர்.

விட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. எஸ். ஜே. சம்பந்தம் கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருப்பதாக தி. மு. க. பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அறிவித்துள்ளார்.

கைத்தறி நெசவாளர் சங்கத்துக்குநிர்வாக டைரக்டர் பதவியை ஏற்படுத்தியது சம்பந்தமாக திரு. சம்பந்தம் அறிக்கையொன்றை வெளியிட்டு, கழகத்தின் மீதும் கழக அரசின் மீதும் பழி சுமத்தியுள்ளார் 'என நாவலர் நெடுஞ்செழியன் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்

## ''மடுவை புனித நகராக்குங்கள்''

ஊரதீவு. ஞாயிறு

''கிறிஸ்தவர்களின் புனித பிரதேசம் மடுவாகும். அவர்களின் வழிபாட்டுத்தலமாகிய மடுவை புனித நகராக்கி, மக்கள் அரசாங்கம் அந்நகரை நன்கு பேணவேண்டும்''

மேற்கண்டவாறு அல்லைப்பிட்டி சமூக வளர்ச்சிக்கழக மாதாந்தக் கூட்டத்தில் பேசிய திரு: என். திரவியம் கூறினர். கழகத் தலைவர் திரு. க. செல்வநாயகம் கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

......

## 'சமுதாய சீர்திருத்தம் ஏற்பட......'

சங்கானை, ஞாயிறு

'தேர்தல் நெருங்கும் காலத்தில் சில கட்சிகள் மக்களுக்கு அது செய்வோம் இது செய்வோம் எனக் கூறிக் கொண்டு ஆதரவு தேடுவதும் தேர்தல் முடிவுற்றதும் அவர்கள் பேச்சும் முடிந்து விடுவதும் வழக்கம். இந்த ஏமாற்றுக் காரியங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் நாம் முன்னேற வேண்டும். அப்போது சமுதாய சீர்திருத்தம் தானே வரும்' என சண்டிலிப்பாய் மத்திய சன சமூக நிலையத்தில் நடைபெற்ற புனருத்தாரண விழாவில் தலைமை வகித்துப் பேசிய திரு எஸ். விநோதன் குறிப்பிட்டார்.

திரு வி. செல்லத்துரை பேசுகையில், தென் இலங்கையில் எத்தனையோ, நல்ல கருமங்கள் சிரமதான மூலம் நடைபெறுகின்றன வென்றும், நாமும் அதுபோல் பல காரியங்களைச் சிரமதான மூலம் நிறைவேற்ற இளைஞர்களின் ஒத்துழைப்பு அவசியமென்றும் சொன்னர்.



கைதடி செவிடர்-குருடர் பாடசாலை பழைய மாணவ சங்க நாலாவது வருடாந்தக் கூட்டத்தில் பழைய மாணவர் சங்க புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள திரு பொ. கெங்காதரம் பிள்ளைக்கு மாலை அணியப்படுகிறது.

## சேவை நலன் பாராட்டுவிழா

நாவலப்பிட்டி, ஞாயிறு

நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் 23 ஆண்டுகள் ஆசிரியர்களாக கடமையாற்றி சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு இடமாற்றலாகிச்செல்லும் திரு நா. அருமைநாயகம், திருமதி தங்கேஸ்வரி அருமைநாயகம் ஆகியோருக்கு மேற்படி கல்லூரி ஆசிரியர்களால் பாராட்டு விழா நடத்தப் பெற்றது.

இவர்களுடைய சேவை நலன்களைப் பாராட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலய அதிபர் திரு. நா. முத்தையா, திரு. அ. இராஜகோபால் (அதிபர் க. கு. மகாவித்தியாலயம்) திரு. சின்னத்தம்பி, திருமதி வஸந்தாசுப்பிரமணியம், திருமதி நகுலேஸ்வரி வேதமணி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## தீர்மானம்

தாவடி, ஞாயிறு

''தாவடிமக்கள் அரசாங்க வைத்தியசாலை அண்மையில் இல்லாததையிட்டு மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர். அரசாங்க வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டியிருப்பின் இணுவில் அரசினர் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிர்ப்பந்தமுமுள்ளது. இணுவிலில் இருக்கும் அரசினர் வைத்தியசாலையுடன் தொடர்பாக பகுதி நேரமாக என்றாலும் ஒரு வைத்தியசாலை நிறுவவேண்டும் என்ற தீர்மான மொன்றை தாவடி கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் நிறைவேற்றிய தோடுசம்பந்தப்பட்ட அதிகாரிக்கும் அறிவித்துள்ளனர்.

கூறப்படும் நடவடிக்கைகள் குறித்து காணி விவசாய அமைச்சர் திரு ஹெக்டர் கொப்பேகடுவ பூரண விசாரணையொன்றை நடத்துகிறாராம்.

'டிவிரெஸ' பத்திரிகை திருமலையிலும் சிங்களவர்கள் தள்ளப்படுகிறார்கள், என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைப் பிரதேசத்தில் சிங்களவர்களை அகற்றிவிட்டு சிங்களவர்களல்லாதவர்களின் கோட்டையாகமாற்றுவதற்கு சில காலமாகவே நடத்தப்பட்டு வந்துள்ள இயக்கமொன்றின் காரணமாக மேற்படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாம். இதுபற்றி சிங்கள பௌத்த இயக்கங்கள் அரசாங்கத்துக்கு புகார்கள் தெரிவித்திருக்கின்றனவாம்,

கிழக்கு மாகாணத்தில் இடம் இல்லாத சிங்களவர்கள் காணிகோரி விண்ணப்பங்கள் தாக்கல் செய்து பல காலமானபோதிலும் அவர்களுக்கு காணிகள் வழங்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் சிங்களவர் அல்லாதவர்களுக்கு இரகசியமாக நிலங்கள் கொடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்து வருவது தெரியவந்துள்ளதாம்.

சிங்களவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட இடங்களைத் திருப்பி எடுத்து சிங்களவர்கள் அல்லாதவர்களுக்கு விநியோகிக்கும் அளவுக்கு நிலைமை முற்றிய போதிலும் இதுபற்றி எத்தனையோ புகார்கள் தெரிவித்தும் கடந்த காலத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

விவசாயத்துக்கு பொருத்தமான இடங்களைப் பெற்றுள்ள சிங்களவர் அல்லாதவர்கள் அப் பகுதியில் உள்ள பிரயோசனங்களைப் பயன்படுத்திக் கொள்வதோடு கள்ளக்குடியேற்றக்காரர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் இடங்களாகவும் அவைகளைப் பயன்படுத்துவதாக மேற்படி இயக்கங்கள் தெரிவித்துள்ளனவாம்.

கீழ் மாகாணத்தில் கடல் ஓரப் பகுதிகள் சிங்களவர் அல்லாதவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருப்பதினால் அப் பகுதிகள் கள்ளக் குடியேற்ற வாசிகளைக் காப்பாற்றுவதற்குப் பயன்படுவது மட்டுமின்றி இந்த நாட்டிலிருந்து பொருட்கள் கடத்தப்படுவதற்கும் உதவியாக இருப்பதும் தெரியவந்துள்ளதாம். கீழ்மாகாணத்தில் காடுகள் எல்லாம்

## சிறுவர் கலைவிழா

திருநெல்வேலி, ஞாயிறு

யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மாலை 6 மணியளவில் வண்ணார்பண்ணை, நல்லூர், உடுவில் சிறுவர் பாடசாலைகள் ஒன்று சேர்ந்து ''சிறுவர் கலை விழா''வை நடாத்தின.

இவ்வைபவத்தை டாக்டர் வி. நடராசாவும், பாரியாரும் ஆரம்பித்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து சிறுவர் பாடசாலை சிறுவர் சிறுமிகள் ஒன்று நடாத்திய செம்பு நடனம், மேல்நாட்டு நடனம் ஆடல்பாடல் ஆகியன இடம்பெற்றன.

உடுவில் சிறுவர்பாடசாலை ஆசிரியை செல்வி கமலாம்பிகை பூவையாவின் சேவையை கௌரவித்து பாராட்டுப் பாமலர் வழங்கப்பட்டது. அரசினர் முஸ்லிம் வித்தியால அதிபர் எம். எச். எம். அப்துல்றஸாக் உரையாற்றினர். அவர் உரையாற்றுகையில், ''இன்றைய சிறுவர்கள்தான் வருங்கால செல்வர்கள் எனவே அவர்களுக்கு இளமையிலேயே நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கப்பழக்க வேண்டியது. ஒவ்வொருவருடைய கடமையென்றும் அச்சிறுவர்களை மேலும் நல்லொழுக்க வழியில் கொண்டுசெல்லக் கூடியது சிறுவர்பாடசாலைகள்தான்', என்றும் கூறினர்.

......

## புதிய நிர்வாகிகள்

புலோலி, ஞாயிறு

தென்புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 1970-ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. கா. செல்வராசா உபதலைவர்: திரு. வ. சிவலிங்கம் இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள் சி. சிவப்பிரகாசம், ப குணநாயகம், பொருளார்: திரு. இ. பத்மநாதன். நிர்வாக உறுப்பினர்களாக ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

......

## தலைவர் தெரிவு

திருகோணமலை. ஞாயிறு

கட்டைபறிச்சான் கிராம சபையின் தலைவர் திரு. எஸ். இராசரத்தினம்கடந்த மாதம் 31-ந் திகதி தனது தலைவர் பதவியை ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து கட்டைபறிச்சான் கிராமசபையின் தலைவர் தேர்தல் இம்மாதம் 21-ந் திகதி உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் திரு. வாமதேவன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

துறவி ஒருவன் சதா இறைவனைச் சிந்திப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் இல்லறத்தான் ஒருவன் தன் குடும்பபாரத்துக்கிடையில் கடவுளை கருத்தில் வைக்க முயலுவானாகில் அது பெரிதும் பாராட்டத் தக்கது.

— பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 25 ந் திகதி (10-8-70)

## செனேட் சபை தடை

செனேட் சபையிலே சென்ற வாரம் அரசாங்கத்துக்கு எதிர்பாராதமுறையில் ஏற்பட்ட தடை அவர்களுக்கு ஒருவித ஏமாற்றமும் திகைப்பும் அளித்துள்ளது. இதில் வியப்பில்லை; அரசியல் சட்டத் திருத்த மசோதா பார்லிமெண்ட் சபையிலே எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேறிவிட்டதால், செனேட்டிலும் இது சுலபமாக நிறைவேறிவிடுமென்று அரசாங்கக் கட்சியினர் எதிர்பார்த்திருப்பின் அது இயற்கையே. ஆனால் திடீரென இரு செனேட்டர்கள் இதை எதிர்த்து ஆணித்தரமாகப் பேசியதின் பயனாக, அம்மசோதா தோல்வியடைந்தது.

எதிர்பாராத இத்தோல்வியைக் கண்டு அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா செனட்சபை மீது ஆத்திரம் கொண்டிருக்கிறார். செனேட்டர்கள் தங்களைத் தவிர வேறு யாருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை என்றும், பார்லிமெண்ட் சபை நிறைவேற்றிய சட்டங்களையெல்லாம் அப்படியே நிறைவேற்ற வேண்டியதே அவர்களது கடமையென்றும், ஜனப்பிரதிநிதிகளின் விருப்பத்துக்கு மாறாக இதுவரை செனட்சபை நடந்துகொண்டதில்லையென்றும், பிற்போக்காளரான அவர்கள், இம்மசோதாவை எதிர்த்து நாட்டின் முன்னேற்றத்துக்கு தடைபோடுவதாகவும் அந்த அமைச்சர் கூறுகின்றார்; ஒருவித ஏமாற்றமடைந்துள்ள நிலையின் அமைச்சரின் இக்கூற்று சரியா என்பதை ஆராய்வதை விட்டு, இந்த எக்கச்சக்கமான நிலையை சமாளிக்க அவர் இனி என்ன செய்யப்போகிறார்,

நிறைவேற்றலாம். அப்படிச் செய்தால் செனட்சபையின் சம்மதம் பெறாவிடினும், இன்றுள்ள அரசியல் சட்டப்படி இம்மசோதா நிறைவேறியதாகும். (2) தங்கள் கட்சியைச் சேர்ந்த ரத்னபுரி மெம்பர் நந்தா எல்லவெலையின் தேர்தலை ஆட்சேபித்து நடக்கும் வழக்கைத் தாமதப்படுத்தி அதற்கிடையே புதிய அரசியல் திட்டத்தை நிறைவேற்றி, அதன்மூலம் செனட்சபையையே அடியோடு ஒழித்துவிடுவது. (3) திரு நந்தா எல்லவெலை மீது குற்றவாளி என்று காணப்படின், அவரை கவர்னர் ஜெனரலைக்கொண்டு மன்னிக்கச்செய்து, மறுதேர்தலில் அவரை போட்டியிடச் செய்வது.

முதலில் கூறிய யோசனையின்படி நடக்க அமைச்சர் விரும்பவில்லை. இப்படிச் செய்தால், இது விரும்பத்தகாத முன்மாதிரியாகிவிடுமாம். இன்றுள்ள அரசியல் சட்டப்படி இந்த வழிதான் சரியானதாகும். என்றாலும் பார்லிமெண்ட் கூட்டத் தொடரை முடித்து, புதியகூட்டத்தொடரை ஆரம்பிப்பதும், ஏற்கனவே சபையில் நிறைவேறிய மசோதாவை மீண்டும் கொணர்ந்து நிறைவேற்றுவதும் கசப்பான காரியமாக இருக்கும்தான் அரசாங்கத்திற்கு இன்று பார்லிமெண்டிலே அமோகமான பலம் இருப்பதால், அது எந்த வழியையும் பின்பற்றத் தடையிருக்க முடியாது. ஆனால் அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்ட ஒரு கண்யம் மிக்க சபையினரையெல்லாம் தான்தோன்றிகளென்றும்பிற்போக்குவாதிகளென்றும் குற்றம் சுமத்துவது, பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சருக்கு அழகாகாது. புதிய அரசியல் அமைப்பிலே

# சோஷலிஸ அமைப்பில் தாய்மொழி உபயோகம்

— ஏ. ஜீ. ஹோஸோவ் —

(தாஷ்கண்ட் பல்கலைக்கழகப்பேராசிரியர்)

ஒடுக்குமுறை, சுரண்டல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பில், ஆளும் தேசிய இனம் தனது அரசியல் அமைப்பு, கலாச்சாரம், மொழி ஆகியவற்றைத் தனது ஆளுகையிலுள்ள இதர தேசிய இனங்களின் மீது திணிக்கிறது என்று மனித சமுதாயத்தின் வரலாறு மிகத் தெளிவாகக் காட்டியுள்ளது. ஆசியா ஆபிரிக்கா, அமெரிக்கா கண்டங்களின் காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் உலகின் இதர பாகங்களிலும் உள்ள ஆளும் தேசிய இனங்களால் கடைப்பிடிக்கப்படும் மொழிக்கொள்கையில் இதை நன்கு காணலாம்; ஜாரிஸ்டு ரஷ்யாவின் காலனியாதிக்க மாகாணங்களில் வாழ்ந்த மக்களும் இதை அனுபவத்தில் கண்டுள்ளனர்.

தேசிய இனங்களும் மக்களும் அவர்களது மொழிகளும் பரிபூரண சமத்துவத்துடன் வாழ்வதற்கும் அவர்கள் மேலும் முன்னேறுவதற்கும் தேவையான சூழ்நிலையைச் சோஷலிசத்தால் மட்டுமே உருவாக்க முடியும். கட்டாயமாகத் திணிக்கப்பட்ட மொழியானது மக்களின் தேசிய மன இயலை ஒடுக்குமென்றும், தேசிய விரோதத்தை வளர்க்குமென்றும் ஒவ்வொருமொழியின் பெருமைகளையும் ஒவ்வொரு தேசிய கலாச்சாரத்தையும் குறைவாக மதிப்பிடுமென்றும் அவநம்பிக்கையை உண்டாக்குமென்றும் லெனின் நிரூபித்தார் எனவே அவர் கட்டாய அரசாங்க மொழியைத் திட்டவட்டமாக எதிர்த்தார். ரஷ்யாவிலுள்ள ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் தேசியஇனங்கள் அனைத்தும் தமக்குள் மிக நெருங்கிய சகோதரஒற்றுமையுடன் வாழ வேண்டுமென கம்யூனிஸ்டுகள் விரு

மக்களைச் சுரண்டலிலும் அறியாமையிலும், கொடுங்கோண்மையிலும், ஆழ்த்தின. எனவே, பெரும்பாலான மக்கள் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர்.

### எழுத்தறிவின்மையை ஒடுக்க ஆரம்ப நடவடிக்கைகள்

சோவியத் அரசு துவக்க காலத்தில் இருந்தே எழுத்தறிவின்மையை ஒழிக்க எல்லா முயற்சிகளையும் செய்தது 1920 இல் லெனினது ஆணையின்படி துருக்கெஸ்தான் பல்கலைக் கழகம் இப்பொழுது தாஷ்க்கண்டு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. மத்திய ஆசியக் குடியரசுகளின் பல்கலைக் கழகங்களுக்கு இது தந்தையாக விளங்குகிறது.

இதன் ஆரம்ப காலத்தில் இதில் உள்ளூர் தேசிய இன மாணவர்கள் சிலரே படித்தனர். ஏனெனில் அந்தக் காலத்தில் எந்தக் காஸத் மக்களும் செகண்டரி கல்வி பெற்றிருக்கவில்லை. காஸக் மொழியிலோ, உஸ்பெக் மொழியிலோ, விஞ்ஞான, தொழில்நுட்பப் புத்தகங்கள் அப்பொழுது இல்லை அதேபோல உள்ளூர்மொழிகளில் மிக்க தேர்ச்சிபெற்ற பேராசிரியர்களும் இல்லை. எனவே பல அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பல்கலைக் கழகத்தில் ரஷ்ய மொழியைப் போதிப்பதற்குத் தயாரிப்புக் குழுக்கள் நிறுவப்பட்டன.

லெனினது ஆணையின்படி ரஷ்யாவிலிருந்து வந்திருந்த பிரபல அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றியதோடு, உள்ளூர் இளைஞர்களுக்கு ரஷ்ய மொழியையும் கற்பித்தனர் இப்பொழுது உஸ்பெக் குடியரசின் தலைசிறந்த விஞ்ஞானிகளாக விளங்குவோர் தாஷ்கெண்டுப் பல்கலைக் கழகத்தில் தமக்குப் போதித்த ஆசிரியர்களை (எஸ். வி. நவுமோவ், ஏ. எல். பிராத்ஸ்கி வி. இ. ரோமனோவ்ஸ்கி முதலிய ஆசிரியர்களை) என்றும் நினைவில் வைத்திருப்பர்.

தாஷ்கெண்டு பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்ற உள்ளூர் விஞ்ஞானிகள் தாய்மொழியில் கல்விபோதிக்கும் செகண்டரி பள்ளிகளை நிறுவுவதற்குப் பெரிதும் உதவினர். எனவே, தேசிய நிபுணர் அணி தயாராயிற்று

மாபெரும் மார்க்ஸிய-லெனினியப் படைப்புக்களும் தற்காலசிந்தனையின் சாதனைகளைப் பிரதிபலிக்கும் நூல்களும், ரஷ்ய இலக்கியங்களும் உலக இலக்கியங்களும், ரஷ்ய மொழியிலிருந்து நாட்டின் இதர மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டதையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். இந்த மொழிபெயர்ப்புக்கள் சமுதாய, அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்பச்சொற்களைத் தாய்மொழியில் உருவாக்கித் தந்தன.

ரஷ்ய மொழியின் உதவியால், சோவியத் நாட்டிலுள்ள இதர மொழிகளும் பெரிதும் வளர்ந்துள்ளன விஞ்ஞானத்துறையில் உலக சாதனைகளை இந்த மொழிகள் மிகத்தெளிவாகவும், துல்லியமாகவும் தெரிவிக்கின்றன. புதின மொழிபெயர்ப்புக்கள் மூலமொழியின் சிறப்புக்களைப் பூரணமாக வெளிப்படுத்துகின்றன

சோவியத் நாட்டின் ஒவ்வொரு சுயாட்சிக் குடியரசிலும், பிரதேசங்களிலும், தாய்மொழியில் தேர்ச்சி வாய்ந்த அறிஞர்கள் உள்ளனர்; இவர்களில பலர் தாய்மொழியிலும், ரஷ்ய மொழியிலும் முழுப்புலமை பெற்றுள்ளனர்.

### பரந்த அளவில் இருமொழி உபயோகம்

சோவியத் மக்கள் ரஷ்ய மொழியிலும் தாய்மொழியிலும் தேர்ச்சி பெற்றிருப்பதால், அன்றாட வாழ்வில் இருமொழிகளையும் பரந்த அளவில் பயன்படுத்துகின்றனர். இதனால் சோவியத் மக்கள் அனைவரும் அறிவுத் துறையில் வெகுவேகமாக முன்னேறவும், நமது தாய்மொழிகளை அபிவிருத்தி செய்யவும் வாய்ப்பு உண்டாகிறது.

ரஷ்ய மொழியானது அனைத்து சோவியத் மக்களினது சோஷலிஸக் கலாசாரத்தின் உள்ளார்ந்த பகுதியாகவும், சோவியத் இளைஞர்களின் முழுநிறை வளர்ச்சிக்கு உதவும் வலுவான கருவியாகவும் விளங்குகிறது. எனவேதான் சோவியத் மக்கள் ரஷ்ய மொழியைப் பெருமளவில் விரும்பிப்படிக்கின்றனர்.

## தமிழ் நாட்டு சஞ்சிகைகள் பிரச்னை

# “தரம் பிரிக்கும் பொறுப்பை நூலகங்களிடம் விடவேண்டும்”

# ஜெயாறன் எழுதுவது:

முந்தாநாள் இரவு சுமார் 10 மணி இருக்கும் ஓர் அன்பர் வந்து அனலைதீவுக்குக் கிளம்புமாறு அவசரமாக அழைத்தார், அங்கு திருவிழாவுக்குக் கொடி ஏற்றமாகியுள்ளதாகக் கூறவே அந்த அன்பைத் தட்டமுடியாமல் அவருடன் புறப்பட்டேன்.

ஊர்காவற்றுறையிலே கப்பல் துறைக்குப் பக்கத்தில் ஒரு வெண்மையான கப்பல் நின்றுகொண்டிருந்தது. அதைப்பற்றி விசாரித்ததில் அது ஒரு பின்லந்து கப்பலென்றும், வருடத்திலே ஆறுமாத காலம் அது அங்குமுகாம்போட்டு, தீவுப் பகுதி எல்லாம் கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரம் செய்வது வழக்கமென்றும் அந்த அன்பர் தெரிவித்தார் கப்பலில் முகாம்செய்து, அவர்கள் தங்கள் சமயப்பிரசாரம் செய்வதை அறிந்ததும், இவ்விதமான பணியை சைவ சமயத்தவர்களும் ஸ்தாபனங்களும் எப்போதுதான் செய்யப்போகின்றனவோ என்று தோன்றியது. அவர்களுக்கு ஏராளமான பணபலம் உண்டு. அத்துடன் ஒப்பிட்டால் சைவ ஸ்தாபனங்கள் இவ்வித முறையில் என்றென்றும் சமயப்பிரசாரங்களைச் செய்யமுடியுமா என்பது மிகவும் சந்தேகமே மேலும் அவர்கள் தங்கள் சமயத்தைப் பிரசாரம் செய்வதற்கென்றே ஆண்களும் பெண்களும் ஆயிரக் கணக்கில் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணிக்க முன்வந்துள்ளனர். அதுபோல் சைவத் தொண்டுக்கு தங்களை முற்றிலும் அளிக்க எவ்வளவுபேர் உள்ளனர்? என்று ஏதேதோ எண்ணமெல்லாம் என் மனதில் ஓடியது.

0 0 0

தீவுகளில் இப்பிரசாரத்தின்பயனாக மதமாற்றங்கள் நடக்கின்றனவா? என்று அன்பரைக் கேட்டேன். அப்படி விசேஷமாக நடப்பதாகத் தெரியவில்லை என்றும், அனலைதீவிலே ஒரு குடும்பமாவது மதம்மாறவில்லை என்றும் எல்லாரும் வழிவழியாக சைவசமயத்தையே பின்பற்றி வருவதாகவும், அந்த அனலைதீவு அன்பர் பெருமையுடன் கூறினார்.

கத்துடன் சைவசமயத்திலே உறுதியுடன் இருந்துவருவதாகவும் அன்பர் விளக்கினார்.

அந்த ஊர் மக்களில் ஓர் தர்மவான் முன்வந்து, சிறிய பள்ளிக்கூடத்தைக் கட்டியதாயும், பின்பு அது பெரிதாக வளர்ந்துள்ளதாகவும் அனலைதீவைச் சேர்ந்தவர்களில் பலர் மேற்படிப்புக்காக வேறிடங்களுக்குச் சென்று படித்து, டாக்டர்கள், எஞ்ஜினியர்கள், ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் முதலிய பல வேலைகளில் இருப்பதாகவும் அறிந்தேன்.

இக்காலத்திலாவது மோட்டார் லாஞ்சுகள் உள்ளன. அக்காலத்திலே சாதாரண படகுகள்தான். அப்படகுகளில் கருங்கல் முதலிய தளபாடங்களை தூர இடங்களிலிருந்தும் கொணர்ந்து பல கோயில்களையும் சிறப்பாகக் கட்டியுள்ளதைப் பார்க்கையில் அவ்வூர் மக்களுக்குத் தங்கள் சமயத்திலும் கோவில்களிலும் எவ்வளவுபற்றும் ஆர்வமும் இருக்கிறதென்பதை அறியக்கூடியதாகவுள்ளது திருவிழாவுக்காக ஆயிரக்கணக்கிலே உபயக்காரர்கள் செலவழிக்கின்றார்கள். அவர்களெல்லாம் அவ்வளவு பெரிய பணக்காரரல்லர். ஐயனார்கோவில் பல வாகனங்களும் கண்ணைக் கவர்ந்தன கோயில்கிணற்றில் சுத்தமான நீர் கிடைப்பதும் பெரிய பெரிய விருட்சங்களும் மக்களின் எளிமையான தூயவாழ்க்கையும் அந்த ஊரின் பெருமையை உயர்த்துகின்றன சினிமா கிடையாது. பொலிஸ் ஸ்டேஷனும் இல்லை. எங்கும் ஒரே அமைதி. அந்த ஊர் சுவாத்தியமும் மிக மேலானதால் வேறு பல ஊர்களிலிருந்தும் முன்னர் நோயாளர்கள் பலர் தங்கள் தேகசுகத்துக்காக அங்கு வந்து டாக்டர்களின் யோசனையின் மீது சிலவாரங்கள் தங்கி இருப்பதுண்டாம்.

இன்றும் அமைதியாக சில நாட்களைக் கழிக்க விரும்புபவருக்கு இத்தீவு மிகவும் மேலானது. விடிய விடிய திருவிழா நடந்தது. அதையெல்லாம் பார்த்துவிட்டு சற்றும் மலமில்லாமல்

Digitised by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யின் அமைச்சரின் இக் கூற்று சரியா என்பதை ஆராய்வதை விட்டு, இந்த எக்கச்சக்கமான நிலையை சமாளிக்க அவர் இனி என்ன செய்யப்போகிறார், என்ன செய்யவேண்டுமென்பது பற்றிக் கவனம் செலுத்துவதே பயனுள்ளதாகும்.

தங்களுக்கு மூன்று வழிகள் இருப்பதாகக் கூறுகிறார் அமைச்சர். பார்லிமெண்டின் இந்தக் கூட்டத் தொடரை முடித்து, புதிய கூட்டத் தொடரை சிம்மாசனப்பிரசங்கமின்றி ஆரம்பித்து, இம் மசோதாவை மீண்டும் கொணர்ந்து ...

லாம் தான்தோன்றிகளென்றும்பிற்போக்குவாதிகளென்றும் குற்றம் சுமத்துவது, பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சருக்கு அழகாகாது. புதிய அரசியல் அமைப்பிலே செனேட்சபைக்கு இடமில்லாமற் போகலாம் ஆனால் பார்லிமெண்ட்சபையில் அரசாங்கம் தனது பெரிய மெஜாரிட்டி பலத்தைக்கொண்டு அவசரத்தில் தவறுகள் செய்துவிடாமல் தவிர்க்க தக்க பாதுகாப்புகளைச் செய்யவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை இந்தச் சம்பவம் உணர்த்துவதாகும்.

# வெளிநாட்டுத்தகவல்சேவை: சோமநாதர் பொறுப்பதிகாரி

கொழும்பு, ஞாயிறு

வெளி நாடுகளில் இலங்கையின் உண்மையான நிலையை விளக்கும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் கீழ் இயங்கும்வெளிநாட்டுப் பத்திரிகைச் சேவைப் பொறுப்பு திரு. கென்னத் சோமநாதரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர் இலங்கை தகவல் பகுதியில் உயர்தர தகவல் அதிகாரியாகப் பதவிவகிப்பவர். வெளி நாடுகளில் இலங்கையின் நிலையைச் சரியான முறையில் அறிமுகப்படுத்துவதற்கான பகுதியில்விசேஷ பயிற்சி பெற்ற அதிகாரிகள் கடமையாற்றுவார்கள். இந்த அதிகாரிகள் இரண்டாவது, மூன்றாவது காரியதரிசிகளின் தரத்தில் நியமிக்கப்படுவார்களெனத் தெரிகிறது அரசாங்க சேவையிலிருந்தும் வெளியிலிருந்தும் இப் பதவிகளுக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இலங்கையின் புதிய கூட்டணி அரசின் கொள்கைகள்பற்றி வெளிநாடுகளில் படுமோசமாகப் பிரசாரங்கள் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து கடந்தவாரம் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மந்திரி சபையில் பெரிதும் கவலை தெரிவித்திருந்தார். இதன் காரணமாக வெளிநாடுகளிலுள்ள நமது தூதரகங்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு கடடளையில் நமது கூட்டணி அரசின் உண்மையான நிலையை வெளிநாடுகளில் சரியாக விளக்கும்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறது

இப்பொழுது செயல்படவிருக்கும் இந்த வெளிநாட்டுத் தகவல் சேவைப் பகுதியின் மூலம் நாட்டின்கொள்கைகளும் செயல்திட்டங்களும்சரியாக விளக்கப்படும் என்று தெரிகிறது

## ஆலயப் . . :

1,ம் பக்கத் தொடர்ச்சி

எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது அதே நேரத்தில் இதைப் பூரண வெற்றியென நாம் முற்றுக் கருதவில்லை.

ஆலயப் பிரவேசத்தால் மட்டும் சிறுபான்மைத் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது. கல்வி பொருளாதார சமூக விடுதலை பெற்றால்தான் சிறுபான்மைத் தமிழர் பூரண சுதந்திரம் அடைந்தவர் ஆவர்! மகாசபை இந்த அடிப்படையிலே தான் செயற்பட்டு வருகிறது கடந்த காலங்களில் எமது மக்களின் கல்வி, பொருளாதார நிலப் பிரச்னைகளில் தலையிட்டு மகாசபை ஓரளவு வெற்றியும் அடைந்துள்ளது.

தற்போதுள்ள முற்போக்கு அரசாங்கத்தின் உதவியைப் பெற்று எமது மக்களின் முக்கிய பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியும் என மகாசபை நம்புகிறது. அதே நேரத்தில் மகாசபை மேலும்-மகாசபை ஊழியர் மேலும் அபாண்டமான பொய்களையும் பழிகளையும் மகாசபைக்கு எதிராக 'புரட்சி,புரட்சி' எனக்கூறித் திரியும் இவ் வியக்கத்தினர் சுமத்தி வருகின்றனர். இவ் வேடத்தாரின் பொய்ப்பிரசாரங்களைக் கேட்டு ஏமாறுதிருக்கும்படி சிறுபான்மைத் தமிழ் மக்களை மகாசபை கேட்டுக் கொள்கிறது'.

0 0 0

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

யாவிலுள்ள ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் தேசியஇனங்கள் அனைத்தும் தமக்குள மிக நெருங்கிய சகோதரஒற்றுமையுடன் வாழ வேண்டுமென கம்யூனிஸ்டுகள் விரும்புகிறார்கள் என்றுலெனின் கூறினார். ரஷ்யச் சூழ்நிலைகளில் இந்த ஒற்றுமை உருவாக்குவதற்கு ஒரு சாதனமாக ரஷ்யமொழி - துர்க்கனேவ டால்ஸ்டாய், தாப்ரோலியுபோவ் சேர்னிஷெவ்ஸ்கி ஆகியோரால் பயன்படுத்தப் பட்ட மாபெரும் ஆற்றல் வாய்ந்த மொழி இருக்கிறது என்றும் லெனின் கூறினார். ஆனால் எந்த மொழியையும் கட்டாயமாகத் திணிப்பதை கம்யூனிஸ்டுகள் எதிர்க்கிறார்கள் என்று அவர் சொன்னார்

### தாய்மொழியைப் பயன்படுத்துதல்

எல்லாத் துறைகளிலும் தாய்மொழியைப்பயன்படுத்தும் உரிமையைசோவியத் யூனியனின்தேசியசுயாட்சிக் குடியரசுகள் அனைத்தும் பூரணமாகப் பயன்படுத்துகின்றன. இந்தக் குடியரசுகளில் வாழும்மக்கள் தங்களது தாய்மொழியின் உதவியால் மார்க்ஸிய - லெனினியக் கருத்துக்களையும் பாட்டாளிவர்க்கத் தேசியக் கருத்துக்களையும் மிக ஆழமாக உட்கொள்ளவும், பொருளாதார கலாச்சார விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தில் தீவிரமாக பங்குகொள்ளவும் முடியும்

இதற்கு மிகச்சிறந்த உதாரணமாக விளங்குகிறது; உஸ்பெக், சோவியத் சோஷலிசக் குடியரசு அக்டோபர் புரட்சிக்குப்பின் தொழில் துறை, விவசாயத்துறைவிஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவற்றில் மிகவும் முன்னேறியுள்ளது சோவியத் நாட்டிலுள்ள இதரயூனியன் குடியரசுகளுக்கும் சுயாட்சிக் குடியரசுகளுக்கும் பெரிய தேசிய இனங்களுக்கும்சிறிய தேசிய இனங்களும் இது பொருந்தும்-

சோவியத் நாட்டில் ரஷ்யன் அல்லாத பகுதிகளின் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கு ரஷ்ய மொழி ஆற்றியுள்ள பங்கையும், அதன் முக்கியத்துவத்தையும் எவரும் புறக்கணிக்க முடியாது.

அக்டோபர் புரட்சிக்கு முன்பு தங்களது மொழியையும் கலாசாரத்தையும் வளர்ப்பதற்குத் தங்களுக்கு அரசியல் உரிமைகளோ, வேறு உரிமைகளோ கிடையாது என்று மத்திய ஆசியாவிலுள்ள பழைய தலைமுறையினர் கூறுகின்றனர் கிழைய நிலப்பிரபுத்துவமும் மதக் கோட்பாடுகளும் ஜாரின் காலனி ஆதிக்கக் கொள்கையும் மத்திய ஆசிய

# "தரம் பிரிக்கும் பொறுப்பை நூலகர்களிடம் விடவேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் சஞ்சிகைகளைத் தரம்பிரிக்கும் பொறுப்பை இலங்கை நூலகச் சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் 'தரமானவாசகர்களின் தேவைகளை நூலகர்களால் மட்டும் உணர முடியும்.''

இலங்கை நூலகச் சங்கத்தின் வடமாகாணக் கிளை நேற்று யாழ். மத்தியகல்லூரியில் கூடி மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது,

திரு: ஆர்:எஸ். தம்பையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில்தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதியாகும் சஞ்சிகைகளைதடைசெய்வதால்ஏற்படும்விளைவுகள் குறித்துநூலகப்பொறுப்பாளர்கள் ஆராய்ந்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முழு விபரம் வருமாறு:-

"நூற்றுக் கணக்கான சஞ்சிகைகளும் ஆயிரக்கணக்கான நூல்களும் தமிழ் நாட்டில் வெளிவருகின்றன. இவைகளுள் ஒருசிலவே இந்த நாட்டில் இறக்குமதியாகின்றன இந்த இறக்குமதியில் தரமான பத்திரிகைகள் சஞ்சிகைகள் புத்தகங்கள் மாத்திரமன்றி இந்த நாட்டுமக்கள் ஆதரவு கொடுப்பதால் தரமற்ற 'துக்கடா' நூல்களும் பிரசுரங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன இதனால் இந்த நாட்டின் பெறுமதியான அந்நிய செலாவணி விரயமாகின்றது ஆகவே தமிழ் நாட்டில் மட்டுமன்றி வேறு நாடுகளிலுமிருந்து இறக்குமதியாகும் பிரசுரங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்இதனால் குப்பைப் பிரசுரங்களின் ஆதிக்கத்தை இந்த நாட்டில் நிறுத்தி விட்டோம் என்பது கருத்தன்று தடைசெய்யப்படும் பிரசுரங்களை இந்நாட்டில் அச்சிட எழுத்தாளர்களும் அச்சகங்களும் காத்திருக்கின்றன.

ஆனால் இறக்குமதியைத் தரம் பிரிக்கும் பொறுப்பை இலங்கை நூலகச் சங்கத்திடம் விட்டு விடவேண்டும் தரமான வாசகர்களின் தேவைகள் நூலகர்களுக்கு மாத்திரமே தெரியவரும்:

நூலகத்துறையில் இருப்பவர்கள் தரம் பிரித்து பிரசுங்களைத் தெரிவு செய்வதில் பயிற்சி பெற்றவர்கள். நூலகவியலில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் நூற் தேர்வு நூல் விவரவியல் என்பவற்றில் விசேஷ பயிற்சி பெற்றிருக்கும் நூலகர்களிடம் இறக்குமதித் தேர்வை விட்டுவிடவேண்டும்.

## இசை சங்கத்திற்கு சந்திரசிறீ கடிதம்

யாழ்ப்பாணம், திங்கள்

'உரிய நடவடிக்கை எடுக்கும்படிகேட்டு, உங்கள் மகஜரை கல்வி அமைச்சருககு அனுப்பி வைததிருக்கிறேம்'

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்துவிட்டுத் திரும்பிய உதவிக் கலாசார அமைச்சர் திரு சோமவீரசந்திரசிறி லங்கா இசைக்கலைஞர் மன்றச்செயலாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

உதவிக் கல்வியமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தபோது அவருக்குமேற்படி சங்கம் அளித்த வரவேற்பில் இசைக்கலைஞர்களுக்கு வேலை வழங்க ஏற்பாடுசெய்யும்படி கேட்டு ஒரு மகஜரைக் கையளித்தது தெரிந்ததே

## 3554 கம்யூ ..

(1 ம் பக்சத்தொடர்ச்சி)

யினர் அறிவித்துள்ளனர்.

நிலப்பறி இயக்க நடவடிக்கையைமுன்னிட்டு, தமிழ் நாட்டில் பல இடங்களிலும் தடையுத்தரவுபோடப்பட்டுள்ளது. சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுமென்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

நிலச்சீர்திருத்த திருத்தச் சட்டம் அமுலுக்குவந்த பின்பு மிகவும் பயனேற்பட்டுள்ளது எனவும் நிலப்பறி நடவடிக்கை அர்த்தமற்றது எனவும் அண்மைக்காலத்தில் சுமார் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் நிலமற்ற 30 ஆயிரம் பேர்களுக்குப்பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளதெனவும் தமிழ் நாடு அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நிலப்பறி போராட்டத்தை தமிழ்நாட்டில் மாத்திரமல்ல மற்றும் இதர மாநிலங்களிலும் நடாத்துவதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் திட்டமிட்டுள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கைதானவர்களின் தொகை தான் அதிகமென்றும் இங்கு மட்டும் 2,093 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. தஞ்சாவூரில் திரு. ஏ:கே:சுப்பையா தலைமையில் இவர்கள் நிலப்பறி இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனராம்:

மாநிலங்களில் ஊர்வலங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும், நிலைமை மோசமாக இல்லை என்றும் அறிவிக்கப்பட்டது:

# 'தமிழ் மலரை திருத்துக!'

வேலணை, திங்கள்

இப்பொழுது வெளியிடப்படும் தமிழ் மலர் 6-ம் வகுப்பு பாடப்புத்தகத்தில் எழுத்துப்பிழை, வசனப்பிழைபோன்ற பல குறைபாடுகள் இருப்பது குறித்தும், ஏனைய தமிழ் மலர்களும் திருத்தப்படவேண்டியது, பற்றியும்இவற்றைத் திருத்திய பின்பே அச்சிடப் பணிக்குமாறும் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்துக்கு பண்டிதர் கா. பொ இரத்தினம் எம். பி. தந்தி மூலம் அறிவித்துள்ளார்.

## ச. ச. நிலையம்

நெடுந்தீவு, ஞாயிறு

சனசமூக நிலையங்கள் யாவும் சமூகத்தை முன்னேற்றுவதற்காகவும் சீர்திருத்தங்களை ஏற்படுத்தவும் அமைக்கப்பட்டுள்ளன. இதனை மனதில் கொண்டு சனசமூக நிலையத்தை இயக்க வேண்டும் என நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்துக்கு தலைமைதாங்கிப் பேசிய நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் திரு அ.த. அம்பலம்தெரிவித்தார்

## வேலைநிறுத்தம். .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலையில் அமர்த்தும்வரை தாங்கள் வேலைக்குத் திரும்பப்போவதில்லையென வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

இதுசம்பந்தமான பேச்சுவார்த்தைகளை மீன்பிடி அமைச்சருடன் நடத்துவதற்காக இலங்கை தொழிற் சங்க சம்மேளன திருமலைக் கிளைச் செயலாளர் கரவை கந்தசாமி தலைமையில் தூதுக்குழுவொன்று கொழும்பு சென்றுள்ளது.

குடும்பமாவது மதம்மாறவில்லை என்றும் எல்லாரும் வழிவழியாக சைவசமயத்தையே பின்பற்றி வருவதாகவும், அந்த அனலைதீவு அன்பர் பெருமையுடன் கூறினார்.

போர்ச்சுக்கீயரும். டச்சுக்காரரும் ஆட்சி நடத்துகையில் சைவசமயக்கோயில்கள் பலவும் இடிக்கப்பட்டன. மதம் மாறியவருக்குத்தான் படிப்பு, உடுப்பு, உத்தியோகம், வர்த்தகம் முதலியவற்றில் சலுகைகள் உண்டு. மற்றவர்களுக்கு அரசாங்க உதவிகள் எதுவும் கிடையா. கொடுமைகள் எவ்வளவோ! அப்படிப்பட்ட காலத்தில் அனலைதீவிலே பள்ளிக்கூடம் கட்டித்தருவதாகவும், உடுப்புகள், புத்தகங்கள், கல்வி எல்லாம் இலவசமாகத் தருவதாகவும். படித்தபின் உத்தியோகமும் வாங்கித் தருவதாகவும் எவ்வளவோ சொல்லி ஆசைகாட்டியும், அனலைதீவுப் பெருமக்கள் அவை எல்லாம் வேண்டாமென்றும், தங்கள் முன்னோர்கள் வழிவழியாகப் பின்பற்றிவரும் சமயச்செல்வமே தங்கள் உயிர்போன்றதென்றும் கூறி, வீரத்தியா

இன்றும் அமைதியாக சில நாட்களைக் கழிக்க விரும்புபவருக்கு இத்தீவு மிகவும் மேலானது. விடிய விடிய திருவிழா நடந்தது. அதையெல்லாம் பார்த்துவிட்டு சற்றும் மனமில்லாமல் அதைவிட்டு அதிகாலையில் திரும்பினேன் மீண்டும் அங்கு சென்று சில நாட்களாவது இருக்க மனம் விரும்புகிறது. இது இனி எப்போது வாய்க்குமோ?

யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் பல வாரங்களாக மழையில்லை. அப்படி இருக்கையில் அனலைதீவில் மட்டும் அன்று நல்லமழை பெய்தது காரணமென்ன? நல்லார் பலர் அங்கு இருப்பதுதானா?

0 0 0

ஆரூர் அத்தா ஐயாற்ற முதே அளப்பூர் அம்மானே, காரூர் பொழில்கள் புடைசூழ் பிறவிற்சருகாவூரானே பேரூர் உறைவாய்ப்பட்டிப் பெருமான் பிரவா நெறியானே, பாரூர் பலரும் பரவப்படுவாய் பாசூர் அம்மானே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# 'பிறநாட்டவர்கள் ஏன் சைவத்தை நேசிக்கின்றனர்?!

அல்லைப்பிட்டி, ஞாயிறு

'இன்று வேறு சமயங்களிலும் பார்க்க சைவசமயமே முதன்மை பெற்றிருப்பதை கண்கூடாகக்காண்கின்றேம். இதற்கு முக்கிய காரணம் இச் சமயத்தில் அரும் பெரும் தத்துவங்கள் இருப்பதே. சைவத்தின் உண்மைகளையும், பெருமைகளையும் அறிந்த மேல் நாட்டார்கள்கூட இந்தச் சமயத்தில் பற்றுக்கொண்டுள்ளார்கள்.''

மேற்கண்டவாறு வேலணை கிழக்கு நால்வர்மடத்தில் நடைபெற்ற சமயவிழாவில் உரையாற்றிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியை பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்

நால்வர் மட அதிபர் திரு. வ க. செல்லப்பா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில் "சைவசமயக் கடவுள்களைப் பாருங்கள் அவைகள் ஒவ்வொன்றும்ஒவ்வொரு கலை அம்சங்கள் பொருந்தியதாகவே காணப்படுகின்றன அந்தக் கலைத்தன்மை நமக்கு ஒவ்வொரு தத்துவத்தைப் புகட்டுகின்றது சைவசமயமே எல்லாவற்றையும் அடக்கியுள்ள ஆதிச்சயம் இச்சமயம்தான் தமிழர்களுடைய அரும் பெரும் பொக்கிசமாகும், இச் சமயத்திலிருந்துதான் வேறுசில சமயங்களும் உருப்பெற்றன. இரண்டாம் நாள் நடைபெற்ற விழாவில் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தலைவர் வித்துவான் வ செல்லையா, அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பணி அமைப்பாளர் திரு. அ. செல்லத்துரை, திரு. பொன். தெய்வேந்திரா ஆகியோர் உரையாற்றினார்கள்.

# திருமலை பத்திரகாளி அம்மன் ஆலயத் தேர்த் திருப்பணி!

திருமலை, ஞாயிறு

திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கும் ஆதியாகிய திரு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் உள்ள தேர் பழுதடைந்து இழுக்கமுடியாத நிலையில் 1966-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு எதிர்பாராத காரணங்களால் பின் போடப்பட்டிருந்த தேர்த்திருப்பணி வேலை தற்போது மீண்டும்ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திருப்பணி வேலைக்கு, சுமார் ஐம்பதினாயிரம் ரூபா வரையில் செலவு எதிர்பார்க்கப்படுவதால் திருக்கோணமலை மாத்திரமன்றி இலங்கைவாழ் சைவப்பெருமக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாடி ஓர் தேர்த்திருப்பணி நிதி ஒன்று மேற்படி கோவில் ஆதீனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org